பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 21 திங்கட்கிழமை (04.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 70

## நேற்றுப் பிற்பகல் தற்கொலைத் தாக்குதல்

# கோட்டை ரயில் நிலையத்தில் குண்டு வெடித்து 12 பேர் பலி!

## 103 பேர் வரை படுகாயம்; 25 பேர் நிலை கவலைக்கிடம்



கொழும்பு,பெப்ரவரி 04

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில், பயணிகள் நிரம்பி வழிந்த சமயம், இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பன்னிரண்டு பேர் பலியாகினர். மொத்தம் 103 பேர் காயமுற்றனர். 25 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது. பெண் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலே இது என்று கருதப்படுகின்றது.

வெளியிடங்களில் இருந்து பல ரயில்கள் கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்து அவற்றிலிருந்து பயணிகள் இறங்கிக்கொண்டிருந்த சமயம், ரயில் நிலையத்தின் மூன்றாம் மேடைப் பகுதியில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றிருக்கிறது.

இந்தக் கோரச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர். சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் உடல் வயிற்றுப் பகுதியுடன் துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு சடலத்தின் எச்சங்கள் காணப்பட்டதால் இது தற்கொலைத் தாக்குதலாக இருக்கலாம் என்றும், தற்கொலைத் தாக்குதல் நடத்தியவரின் எஞ்சிய உடல் பகுதியே அது என்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'யாழ். தேவி' ரயில் சேவை மதவாச்சி வரை மட்டுமே!

### பாதுகாப்புக் கருதி நடவடிக்கை

கொழும்பு,பெப்.04

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையிலான 'யாழ் தேவி' ரயில் சேவை பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் மறு அறிவித்தல்வரை மதவாச்சிவரை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் முதல் தடைப்பட்டிருந்த கொழும்பு - மன்னார் இடையிலான பஸ் சேவை இன்று மாலை 4 மணிமுதல் மீண்டும் ஆரம்பமாகும் என்று மன்னார் மாவட்ட பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (சி)

## தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் கைக்குண்டு வெடிப்பு; ஏழு பேர் படுகாயம்

கொழும்பு,பெப்.04

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச் சாலையில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பில் கர்ப்பிணிப்பெண், இரு சிறுவர்கள் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர்.

பறவைகள் காட்சியகத்திற்கு அருகில் காலை 10.30 மணியளவில் இக்கைக்குண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் நிலையத் தாக்குதல்தாரியின் இலக்கு வேறாக இருந்திருக்கலாம் - ரம்புக்வெல

கொழும்பு, பெப். 04

கொழும்பு கோட்டை ரயில் நிலையத் தாக்குதல் நடத்திய தற்கொலைதாரியின் இலக்கு வேறாக இருக்கலாம். ரயில் நிலையத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால், ரயிலில் இருந்து இறங்கியதும் அவர் குண்டை வெடிக்க வைக்க முடிவு செய்திருக்கலாம்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாள

(10ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு பயணிகள் பஸ் குண்டிலிருந்து அருந்தப்பு!

### நடத்துநரின் சாதுரியத்தால் அனர்த்தம் தவிர்ப்பு

கொழும்பு,பெப்.04

கொழும்பில் மற்றொரு பயணிகள் பஸ்ஸில் வெடிகுண்டு ஏற்படுத்தவிருந்த கோர விளைவு, அந்த பஸ்ஸின் நடத்துநரின் கவனத்தால் தவிர்க்கப்பட்டது.

கொழும்பு மருதானை வழியாகச் சென்ற 138 ஆவது இலக்க பஸ்ஸில் இருந்த இந்த அநாமதேயப் பொதியைக் கண்டு எச்சரிக்கை அடைந்த நடத்துநர் அந்தக் குண்டுப் பொதியை

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு, தம்புள்ள தாக்குதல்களுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 04

கொழும்பு மற்றும் தம்புள்ளப் பகுதிகளில் பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இச்சம்பவங்களைக் கண்டித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கொழும்பு ரயில் நிலையத்திலும் மற்றும் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையிலும் நேற்றுமுன்தினம் தம்புள்ளவில் பஸ்மீதும் நடத்

(10ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கிலிருந்தும் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு உரிய நகர்வுகள்

### 60 ஆவது சுதந்திர தின வாழ்த்தில் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.04

வடக்கிலிருந்தும் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுதந்திர தினத்தின் அறுபதாவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கின்றார். அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

2500 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றையும் நாகரிகத்தையும் கொண்ட ஒரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் விரும்பிய பிரதேசத்தில் வாழும்நிலை நெருங்கிவருகிறது

### சுதந்திரதினச் செய்தியில் யாழ்.தளபதி

யாழ்ப்பாணம்,பெப்.4

பயங்கரவாதத்தால் எமது நாடு இழந்த சௌபாக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கமும் பாதுகாப்புப்படையினரும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக தற்போது பயங்கரவாதிகள் பாரிய பின்னடைவை எதிர் கொண்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வவுனியாவுக்கான பஸ் சேவை மதவாச்சியுடன் நிறுத்தம்

கொழும்பிலிருந்து வவுனியா மற்றும் மன்னாருக்கான பயணிகள் பஸ் சேவை தற்போது மதவாச்சிவரை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள சுதந்திரதின நிகழ்வுகளின் பாதுகாப்பு நடவடிக்கைக்காகவே இந்தச் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் இன்று மாலை 4 மணியின் பின்னர் மீண்டும் வழ

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குண்டுவெடிப்பை அடுத்து மாத்தளையில் 16பேர்கைது

கொழும்பு,பெப்.04

மாத்தளை,நாவலப் பிரதேசத்தில் இராணுத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று அதிகாலை மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 16 பேர் கைது செய்யப் பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தம்புள்ள பஸ் குண்டுவெடிப் புச் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவர் நாவலப் பிரதேசத்தில் மறைந்திருக்கிறார் எனக் கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் -

கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியவர்கள் என்றும் -

அவர்களிடம் தொடர்ந்தும் விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என் றும் - பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்பிரதேசத்தில் நேற்று முன்தினமும் சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)


## குருத்துவ பொன்விழா நாயகன்

அருட்தந்தை J.P.E. செல்வராஜா அடிகளாரை
(முன்னாள் குருமுதல்வர், யாழ்.மறை மாவட்டம்)

### மனமுவந்து வாழ்த்துகின்றோம்



இறைவாழ்வில் இணைந்து
இன்புறும் பொன்விழாவில்
மறைசேவையில் மாண்புற்ற
எம் மண்ணின் மைந்தனே!
குறைவிலா ஆயுளும் குன்றா
வளமும் பெற்று
நிறைவுடன் வாழ
வாழ்த்துகின்றோம். வாழ்க!

பங்குத்தந்தையும், பங்குமக்களும்
அச்சுவேலி புனித சூசையப்பர்
ஆலயம். (70808)


## இதய அஞ்சலி



எமது சக ஊழியரும் சங்க உறுப்பினருமான
**நாகமணி விசாகலிங்கத்தின்**
திடீர் மறைவுச் செய்தியை அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை மின்சார சபை
யாழ்ப்பாணம். நலன்புரிச்சங்கமும் விளையாட்டுக்கழகமும்.

## கண்ணீர் அஞ்சலி



மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை
வசிப்பிடமாகக் கொண்ட
**நாகமணி விசாகலிங்கம்**
**அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

அன்னார் அன்பு, அடக்கம், அமைதி
இவற்றிற்கு இலக்கணம் வகுத்தவர்
யாரையும் மனம் நோகா வண்ணம்
தன் கடமையைச் செய்தவர்
அன்னாரின் திடீர்மறைவுச் செய்தி அறிந்து
அதிர்ந்து போனோம்!
நேற்று வரை எம்மோடு
நிழலாக இருந்தவரே!
காற்றெனவே வந்த விதி
கடிதினிலே பிரிந்ததனால்
ஆற்றொணாச் சோகமுற்றோம்!
என்றும் எமது உள்ளத்திலும்
மறையாது உம் நினைவு!

*அன்னாரின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இலங்கை மின்சார சபை,
யாழ்.நகரப் பணிமனை
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலாம்பிகை பாலசிங்கம்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை பாலசிங்கம் நேற்று (03.02.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கொழும்பு ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்தியநாதர் - சீதேவிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகளும் தங்கவேல்(யாழ்ப்பாணம்), அஞ்சலாதேவி (கொழும்பு), நாகநாதபிள்ளை(இணுவில்) ஞானவேல்(T.N.G. Brothers, கொழும்பு), புஷ்பலீலா (சுவிஸ்), தற்பரநாயகி(விஞ் ஞான ஆசிரியை, விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் சொர்ணகாந்தி(யாழ்ப்பாணம்), ரவீந்திரன் (சுவிஸ்), சிவகாமசுந்தரி (இணுவில்), கேதாரகௌரி(கொழும்பு), சௌந்தரராஜா(சுவிஸ்), தர்மராஜா(கொழும்பு) ஆகியோரின் பாச மிகு மாமியாரும் காலஞ்சென்ற நாகநாதபிள்ளை, சுப்பிரமணியம், சுந்தரம்மா, இராசம்மா, பேரம்பலம்(நோர்வே) ஆகியோரின் பாச மிகு சகோதரியும் பூமாது, காலஞ்சென்ற செல்லையா, செல்லப்பா, பசுபதிப்பிள்ளை, நாகம்மா, செல்லம்மா, தர்மலிங்கம், இந்திரபூபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம்(06.02.2008) புதன்கிழமை ஜெயரட்ன மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவு டல் பி.ப. 3 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*539, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P. 2229175. Colombo T.P: 0112439482

தகவல்:
தங்கவேல்
(மகன்)

## விவசாய வீதி புனரமைப்பு

வலி தென் மேற்கு,பெப்.4

பண்டத்தரிப்பு ஏழு புளியடி விவசாய வீதியை புனரமைப்புச் செய்வதற்கு வலி தென்மேற்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சபை அதிகாரிகள் குழு கடந்த வாரம் இவ் வீதியை நேரில் சென்று பார்வையிட்டு சென்றுள்ளனர். இவ் வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனம் வலி தென் மேற்கு பிரதேச சபை செயலாளரைக் கடிதம் மூலம் கேட்டி ருந்தது. (1-135)

## காரைநகர் ஆயுள்வேத நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.4

காரைநகரில் அண்மையில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஆயுள் வேத மத்திய மருந்தகத் திற்கான நிரந்தரக்கட்டடம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த மத்திய மருந்தகம் அமைப்ப தற்கான காணியை அன்பளிப்பாக வழங்க விரும்பும் பொதுமக்கள் தங்கள் பகுதி கிராம சேவையாளர் ஊடாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் கேட்டுள்ளார்.

## யாழ்.செயலகத்தில் தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்ட பிரதேச செயலக கிராம அலுவலர் மற்றும் வெளிக்கள உத்தியோ கத்தர்கள் ஆகியோருக்கு தலைமைத் துவம், குழு வேலைத்திட்டம் ஆகியவை தொடர்பாக இருநாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 8ஆம் 9ஆம் திகதி களில் முதலாவது தொகுதியினருக்கான பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவ னத்தின் திறன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## வெள்ளப் பாதிப்பு நிவாரணம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் பிரதேச பிரிவுகள் ஊடாக வெள்ளப் பாதிப்பு நிவாரணம் வழங்கப்படும்.

கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பம் செய்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவை பிரிவில் தமது விண்ணப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அண்மையில் பெய்த கடும் மழையி னால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கென பிரதேச செயலர் பிரிவு ரீதி யாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது தெரிந் ததே. (1-95)

## சூழல் பாதுகாப்பு ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.4

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ''எமது சூழலை நாமே பாது காப்போம்'' என்றும் செயல்திட்ட ஆரம்ப நிகழ்வு நாளை செவ்வாய்கிழமை முற்ப கல் 10 மணிக்கு கோண்டாவில் குமர கோட்டம் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ் அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

## சாவகச்சேரி நகரசபையில் மாநாட்டு மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

சாவகச்சேரி நகரசபையில் பத்து லட் சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நகரசபை மாநாட்டு மண்டபக் கட்டடம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நகர சபைச் செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் நடை பெற வுள்ள இந்நிகழ்வில் யாழ். பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தினைத் திறந்து வைக்கவுள்ளார். (207)

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூ.சங்கம் (வ/து)

### விசேட பொதுக்கூட்டம் 10.02.2008

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 10.02.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர் களையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

முக்கிய குறிப்பு: சேவை அணிவரிசைப் பட்டியலில் பதிவு செய்யப் பட்ட பாரவூர்த்திகளை மீளாய்வு செய்ய வேண்டி இருப்பதனால் அங்கத் தவர்கள் தவறாது சமூகம் தந்து சேவையில் ஈடுபடுவதனை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

இயக்குநர் சபை,
யா/மா/த/ பா/உ/கூ/சங்கம்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய கேற் கீப்பர், யாழ்.போதனா வைத்தியசாலை)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணம், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை நேற்று (03-02-2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந் தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற தைரியலட்சுமி மற்றும் நாகபுஸ்பத்தின் பாசமிகு கணவரும் பத்மாதேவி, மகேந்திரராஜா (கனடா), வசந்தா தேவி (பிரான்ஸ்),விமலாதேவி (கனடா), வாசுகிதேவி (கொழும்பு), விஜயராஜா (பிரான்ஸ்), விக்னராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ஞானானந்தன், பிரியதர்ஷினி, கெங்காதரன், ஜோசப், காலஞ்சென்ற குகராஜசெல்வம், ஞானமலர், உருத்திரகுமாரி ஆகி யோரின் மாமனாரும் திருமதி ஆனந்தராஜா ஷர்மிளா (ஆசிரியை, யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி.), கயூரன் (இராமநாதன் நுண்கலைக்கழகம் - சித்திரமும் வடிவமைப்பும், 2ஆம் வருடம்), லக்ஷிதா, சைலஜா, பிரசன்னா, டினோக்கா, றெவோன், கஜேலன், கஜேவன், நிமலதாரணி, ஜனனி, ஜனுசன், ஜனிக் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2008) திங் கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூத வுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 187, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
நாகபுஸ்பம்
(மனைவி)
(70802)

### நாகமணி விசாகலிங்கம்

(இலங்கை மின்சார சபை ஊழியர்)



கைதடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி விசாகலிங்கம் (02.02. 2008) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - தங்கமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ் சென்ற செல்வரட்ணம் மற்றும் மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மருமகனும் செல்வரஞ்சிதராணியின் கணவனும் நந்தகுமார்(வவுனியா) அவர்களின் சகோதரனும் செல்வ ரஞ்சிதமலர் (லண்டன்), செல்வரஞ்சிதகுமார்(லண்டன்) , செல்வ ரஞ்சிதமதி(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் செந்தூரன் (லண்டன்), கஜனி(சா/இந்துக்கல்லூரி உ.த.மாணவி), ஆர்த்தி (கமலாசினி வித்தியாலயம், மட்டுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரட்ணா(லண்டன்), சுரேஸ்(லண்டன்), நிரோஜினி (வவுனியா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2008) திங்கட் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.* (70809)

தகவல்:
மனைவி(தயா),
பிள்ளைகள்

### திருமதி கந்தசாமி சிரோன்மணி

(பலகாடு, காரைநகர்)



நவாலியைப் பிறப்பிடமாகவும் பலகாடு, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிரோன்மணி நேற்று (03.02.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவமணி மற்றும் மனோன்மணி (மலேசியா), ஜெக நாதன் (ஆனைக்கோட்டை), அன்னபூரணம் (நவாலி) ஆகி யோரின் சகோதரியும் கணேசலிங்கம் (சுவிஸ்), ஸ்ரீகாந்தன் (குளோத் சென்ரர், யாழ்ப்பாணம்) ,சிவலிங்கம்(சுவிஸ்), ஸ்ரீமகேஷ் வரலிங்கம், ஸ்ரீநடராசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோ ரின் அன்புத் தாயாரும், விமலாதேவி (பேபி), சிவஞானம் (ஆசிரியர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), கிருஷ்ண மாலா, சுந்தராம்பாள், விஜயபாரதி ஆகியோரின் அன்பு மாமியும், கல்லவாணி, கலைச்செல்வன், விஷ்ணுப்பிரியா, கிருஷ்ணப் பிரியா, தனுராஜ், கபில்ராஜ், சிவப்பிரியா, சிவச்செல்வன், சிவ கௌரி, ஆதவன், ராகவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.02.2008) திங் கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் நீலகிரி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலகாடு,*
*காரைநகர்.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரெழுவில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் நாளை முற்பகல் திறந்துவைக்கப்படுகிறது

குருநகர்,பெப்.4

ஊரெழு ஆயுள்வேத மத்திய மருந்தகம் நாளை செவ்வாய்க்கிழமை உரும்பிராய் பிரதேச சபை உப அலுவலகத்துக்கு அருகில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த மத்திய மருந்தகப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் என்.சொரூபி தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கோப்பாய் பிரதேச செயலாளர் சீ.ஏ. மோகன்றாஸ், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை திணைக்களத் தலைவர் டாக்டர்திருமதி எஸ்.பஞ்சராஜா, வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் ரி.நடராஜா, உரும்பிராய் கிராம உத்தியோகத்தர் எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

யாழ்.மாவட்டத்தில் திறந்துவைக்கப்படும் ஐந்தாவது மத்திய மருந்தகம் இதுவாகும்.

சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை காரைநகர் ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு, தம்பசிட்டி ஆகிய இடங்களில் ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

ஊர்காவற்றுறை, சரசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(203-51)



காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் அண்மையில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டது.

இதில் விவாகப் பதிவுகளை மேற்கொண்ட வயோதிபத் தம்பதியினருக்கு விவாகச் சான்றிதழ்களை காரைநகர் உதவி அரச அதிபர் வழங்குவதையும் அருகில் காரைநகர் பிரதேச இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் கா.சோமசுந்தரம், விவாகப் பதிவாளர் திருமதி ச.ஏகநாதன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (250)

# 80 வீதமான அரச அலுவலர்களுக்கு ஓய்வூதிய இலக்கம் பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்ட அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றும் 80 வீதமான அலுவலர்களுக்கு ஓய்வூதியர் இலக்கம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 70 வீதமான அரச அலுவலர்களின் சுயவிவர கோவையில் வரலாற்றுத்தாள் முறையாகப் பேணப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களிலேயே இந்த நிலைமையுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஓய்வூதியர் இலக்கங்கள் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்கள் ஆவணங்களை ஒழுங்குபடுத்தி கொழும்பு ஓய்வூதியத் திணைக்கள கணக்காளருக்கு அனுப்பி அங்கிருந்து பெறப்பட வேண்டும்.

ஆனால் 80 வீத அலுவலர்களுக்கு இச் செயற்பாட்டினை பெற சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றுத்தாள் ஒழுங்கின்மை, ஓய்வூதியர் இலக்கமின்மை போன்றவற்றால் ஓய்வு பெற்ற பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்கத திணைக்களத்திற்கு பல தடவைகள் அலையவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (203-95)

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 47ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,பெப்.4

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 47ஆவது ஆண்டு நிறைவும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்துகொள்வார்.

நிகழ்வுக்கான அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

2006, 2007ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் ஆகிய தேர்வுகளில் சித்திபெற்றோருக்கு இந்நிகழ்வில் பட்டமளிப்பும் இடம்பெறுமென சங்கச் செயலாளர் சு.செல்லத்துரை அறிவித்துள்ளார்.

தேர்வுகளில் சித்திபெற்றோர் விவரம் வருமாறு -

2006 இளஞ்சைவப்புலவர் - க.கயிலவாசன் - மிருசுவில்.

2006 சைவப்புலவர் - த.சரோஜினி தேவி - நல்லூர், க.கஜரூபன் - மிசுருவில், ஜெ.ஜெயசித்ரா - காரைநகர், மு.மதிவதனி - யாழ்ப்பாணம், இ.சியாமினி - அச்சுவேலி, ச.சிறிகாந்தன் - யாழ்ப்பாணம்.

2007 இளஞ்சைவப் புலவர் - வை. தேவகி - கட்டப்பிராய், லோ.கோபிகா - நீர்வேலி, எஸ்.மனோராணி - பன்வில, ஜோ. விஜயதர்சினி - லண்டன்.

2007 சைவப்புலவர் - க.விமலாவதி - இளவாலை, ந.திருக்குமரன் - இடைக்குறிச்சி, வரணி, சி.ஜனகா - சுன்னாகம், ந.புகன் சிறீந்திரன் - மருதனார்மடம், பொ.சுகந்தன் - நெல்லியடி, பா.இந்திரசர்மா - நீர்கொழும்பு, க.சிவானந்தன் - லண்டன். (203-207)

## சாவகச்சேரி இந்துவின் நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம்,பெப்.4

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரி முதல்வர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி கலந்துகொள்வார்.

நினைவுப் பேருரையை வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனானந்தா நிகழ்த்துவார். தொடர்ந்து தாமோதரன் சஞ்சிகை வெளியீடு இடம்பெறும். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். அதன் முதற்பிரதியை கல்லூரி யின் முன்னாள் அதிபர் க.மகேஸ்வரன் பெற்றுக்கொள்வார். (203)

## சிறுதானியச் செய்கை வலி.தென்மேற்கில் ஆரம்பம்

வலி.தென்மேற்கு,பெப்.4

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் நெல் அறுவடை செய்த வயல் காணிகளில் எள்ளு, பயறு, கௌபி, உழுந்து ஆகிய சிறுதானியச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனங்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகள் விவசாயிகள் சம்மேளனங்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள பிடிகாரர்களால் பிடிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (203-135)

## ஆக்கப்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சிவகுமாரனின் ஆக்கப் பொருள் கண்காட்சி எதிர்வரும் 9,10ஆகிய திகதிகளில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சியினை தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (203-207)




## ஸ்ரீல.சு.க. அலுவலகத்தில் சுதந்திர தின நிகழ்வு

குருநகர்,பெப்.4

இலங்கை சுதந்திரமடைந்து 60ஆம் வருட நிகழ்வு இன்று திங்கட்கிழமை யாழ். முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். கிளை அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.தேவகுலநாயகம் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் யாழ்.கிளையின் தொகுதி அமைப்பாளர்கள் இந்தநிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-51)

# பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிப் பிரிவில் 34 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

வலி.தென்மேற்கு,பெப்.4

பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கி பிரிவில் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. சமுர்த்தி வங்கி முகாமையாளர் ந.சுசீந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான உதவிகளை வழங்கினார்.

இதன் பிரகாரம் -

இளவாலையைச் சேர்ந்த விதவையை குடும்பத் தலைவராகக் கொண்ட பயனாளி ஒருவருக்கு வீடு அமைப்பதற்கான கொடுப்பனவாக 50ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

அத்துடன் முந்திரிகை செய்கையை மேற்கொண்டுள்ள 10 பயனாளிகளுக்கு அதற்கான மூலப்பொருள்களான தூண், வலை, நைலோன் கயிறு என்பன வழங்கப்பட்டன. கால்நடை வளர்ப்பிற்கென 10 பயனாளிகளுக்கு பசுமாடுகள், ஆடுகள், எனபனவும் வழங்கப்பட்டன.

மேலும் வெங்காய செய்கையில் ஈடுபடும் எட்டு பயனாளிஞக்கு அதற்கான மூலப் பொருள்களும் வீட்டுத்தோட் செய்கையில் ஈடுபடும் ஐந்து பயனாளிகளுக்கு அதற்கான விதைகளும் வழங்கப்பட்டன. (203-135)

## மறைக்கல்வி பாடசாலை மண்டபம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

உரும்பிராய் கிழக்கு சென். மைக்கல் தேவாலய வளாகத்தில் இருபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மறைக்கல்வி பாடசாலை மண்டபம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.


யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் இணைந்து இந்த மண்டபத்தைத் திறந்துவைத்தனர். (203-288)


## செயற்றிட்ட ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,பெப்.4

'நமது சூழலை நாமே பாதுகாப்போம்' என்ற பொருளிலான செயற்றிட்ட ஆரம்ப விழா நாளை செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் குமரகோட்டம் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரசர்மா, கிறிஸ்தவ நிதிய அவசரகால உத்தியோகத்தர் திருமதி தர்சினி மகேந்திரன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (203)





வடமராட்சி தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய முன்னாள் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தால் அவரது இல்லத்தில் வைத்து இரத்ததானம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமுனையிலிருந்து படைகள் ஆனையிறவை நோக்கி நகரலாம்; போர் இப்போது உக்கிரமான கட்டத்தை நெருங்கிச் செல்கிறது

கடந்த திங்கட்கிழமை ஜனவரி 28 முற்பகல் 9.15 மணியளவில் ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ் - 32 ரக வானூர்தி உயர் அதிகாரிகளுடன் பலாலியில் தரையிறங்க ஆயத்தமா கிய போது, பீரங்கி எறிகணைகள் பலாலி தளத்திற்குள் வீழ்ந்து வெடிக்க ஆரம்பித்தன. யாழ்.குடாநாட்டில் உள்ள படையினரின் தலைமையகம் பலாலித் தளமாகும்.

வானூர்தியில் இருந்த உயர் அதிகாரிகளில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, கூட்டுப்படைத் தலைமை அதிகாரி ஏயர் மார்சல் டொனால்ட் பெரேரா ஆகியோர் இருந்தனர். புதிதாக உருவாக்கப்பட்ட கவசத்தாக்குதல் படையணியின் பதக்கம் அளிக்கும் விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

பூநகரியின் கல்முனையின் முனைப் பகுதியில் இருந்து இரு 130 மி.மீ பீரங்கிகள் மூலம் விடுதலைப் புலிகள் ஏவிய


மடுவில்...

எறிகணைகளில் 15 எறிகணைகள் பலாலித் தளத்துக்குள் விழுந்து வெடித்திருந்தன. இத்தாக்குதலில் 55 ஆவது படையணியைச் சேர்ந்த படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து பதில் தாக்குதல் நடத்தும்படி யாழ்.மாட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சத்திரசிறி உத்தரவிட்டிருந்தார். வான் படையின் வானூர்திகளும் தாக்குதலை நடத்தியிருந்தன.

எனினும் விடுதலைப் புலிகள் தமது பீரங்கிகளை நகர்த்தியிருக்கலாம் என படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் தமது பீரங்கிகளை விரைவாக நகர்த்தும் திறன் கொண்டவர்கள். உழவு இயந்திரங்களின் உதவியுடன் அவர்கள் பீரங்கிகளை தாக்குதலின் பின்னர் விரைவாக நகர்த்தி விடுவதுண்டு.

பூநகரியின் கல்முனை முனைப் புள்ளியானது விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். அதாவது இப்புள்ளியில் இருந்து 27 கி.மீ தூர வீச்சிற்குள் யாழ்.குடாநாட்டின் பிரதான தளம் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

**கல்முனையிலிருந்து பலாலியை முடக்க முடியும்**

130 மி.மீ ரக பீரங்கியின் தூர வீச்சு 27.5 கி.மீ ஆகும் எனவே கல்முனை புள்ளியில் இருந்து விடுதலைப் புலிகளால் பலாலித்தளத்தை முடக்கமுடியும். விடுதலைப் புலிகள் வசம் நான்கு 130 மி.மீ பீரங்கிகளும் இருபது 122 மி.மீ. பீரங்கிகளும், எண்பது 120 மி.மீ மோட்டார்களும் உண்டு என நம்பப்படுகின்றது.

பாதுகாப்புத்துறை உயர்அதிகாரிகளின் பயணத்தை தடுப்பதே இத்தாக்குதலின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறியுள்ளது. எனினும் கவசத்தாக்குதல் படையணியின் விழா திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றது. இந்த விழாவின் பிரதம அதீதியாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி சந்திரசிறி பங்குபற்றி இருந்ததுடன், எட்டு அதிகாரிகளும் 125 படையினரும் அணிவகுப்பு மரியாதையை வழங்கியிருந்தனர்.

கவசத்தாக்குதல் படையணியானது சரத்பொன்சேகாவின்

**'லக்பிம' ஆங்கில வார இதழின் நேற்றைய பாதுகாப்பு நிலைவரம் கட்டுரையின் தமிழாக்கம் இது.**

ஆலோசனையில் உதயமாகிய உத்தியாகும். படையினரின் நகர்வுத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய படையணிகளுடன் ஒப்பிடும்போது அதன் சுடுதிறனும் அதிகமாகும்.

எனினும் இப்படையணிக்கு தேவையான விநியோகங்கள் அதிகமாகும். அதாவது அவர்களின் வாகனங்களை பராமரிப்பதற்கு தேவையான படையினரும் அதிகம்.

சில படை நடவடிக்கைகளில் இலகு காலாட் படையினரின் நகர்வுத்திறன் மிகவும் குறைவானதாகும். குறிப்பாக "வெற்றி நிச்சயம்" படைநடைவடிக்கையை குறிப்பிடலாம். இதன் போது விடுதலைப் புலிகளின் நேரடியற்ற சூடுகளின் அதிகளவான இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் கவசத் தாக்குதல் படையணியினரின் உருவாக்கத்தின் மூலம் இராணுவத்தினரின் இழப்புக்களைக் குறைக்க முடியும். அதாவது கவசவாகனத்தின் கவசத்தகடுகள் தாக்குதல்களில் இருந்து துருப்புக்களைக் காப்பாற்றலாம்.

கவசத் தாக்குதல் றெஜிமென்ட் ஆனது மூன்றாவது சிலோன் இலகு காலாட் படை பற்றாலியன், பத்தாவது சிங்க றெஜிமென்ட், நாலாவது கஜபா பற்றாலியன், 5ஆவது மற்றும் 6ஆவது கவசபடைப் பிரிவுகள், (இவை புதிதாக உருவாக்கப்பட்டவை) ஆகிய பற்றாலியன்களை கொண்டது.

**சென்ற வருடம் கொடிகாமத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது**

இப்படையணி மீது விடுதலைப் புலிகளுக்கு எப்போதும் ஒரு கண் உண்டு. 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் நாள் கொடிகாமத்தில் உள்ள 53ஆவது படையணியின் தலைமையகத்தில் நடைபெற்ற கவசத் தாக்குதலில் படையணியின் ஆரம்ப விழாவின் போது விடுதலைப் புலிகள் பீரங்கித் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

படையணிகளின் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். காலை 6.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் கவசத் தாக்குதல் படையணி 55 போர் தாங்கிகளைப் பயன்படுத்தி இருந்தது.

**வட போர்முனையில் தாக்குதல்கள் அதிகரிக்கலாம்**

அதன் போது இரண்டு படையினர் கொல்லப்பட்டதாகவும் ஆறுக்கு அதிகமானோர் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. கவசத் தாக்குதல் படையணி பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிள்ளதால் வட போர் முனையில் படை நடவடிக்கைகள் அதிகரிக்கலாம். படையினர் ஆனையிறவை நோக்கி முன்நகர்வதுடன் கிளிநொச்சியையும் கைப்பற்ற முயற்சிக்கலாம். இப்பகுதிகளில் திறந்த தரையமைப்பு கவசத் தாக்குதல்களால் படையணியின் நடவடிக்கைக்கு சிறந்தது.

இதனிடையே தென் இலங்கையில் தாக்குதல் அச்சங்கள்


தம்புள்ளவில்...

அதிகரித்துள்ளன. இந்த அச்சம் கடந்த சனிக்கிழமை காலை தம்புள்ள பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புடன் மேலும் அதிகரித்துள்ளது.

இத்தாக்குதலில் பஸ்ஸில் இருந்த 20 பேர் கொல்லப்பட்டதுடன் 50 இற்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த வருடத்தில் இடம்பெற்ற 2ஆவது குண்டுவெடிப்பு இதுவாகும் முதல் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 27பேர் கொல்லப்பட்டிருந்தனர். கடந்த வாரம் மடுப்பகுதியில் இடம்

## கல்முனையிலிருந்து பலாலியை முடக்கமுடியும்

விழாவை ஆரம்பிப்பதற்குரிய விளக்கை ஏற்றியவுடன் அந்தப்பகுதியில் 34 எறிகணைகள் விழுந்து வெடித்திருந்தன. அதன் போது இந்த பிரிகேட்டின் கட்டளைத்தளபதி லெப்.கேணல் ரால்ப் நுகெரா, லெப்.கேணல் சுமித், அத்தப்பத்து, மேஜர் ஹஜேந்திரா பிரீஸ் ஆகியோரும் மேலும் இரு அதிகாரிகளும் காயமடைந்தனர்.

2006ஆம் ஆண்டு முகமாலையில் நடைபெற்று தோல்வியில் முடிந்த படை நடவடிக்கையின் போது இப்படையணி ரி 55 ரக போர் டாங்கிகள் உட்பட பல கவச வாகனங்களை இழந்திருந்தது.

இதனிடையே படையணி கடந்த புதன்கிழமை முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளில் பங்குபற்றியுள்ளது. 53 மற்றும் 55ஆவது

பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 11 பாடசாலை சிறுவர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

தட்சணாமருதமடுப்பகுதியில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஏற்றிச்சென்ற பேருந்தே தாக்குதலில் சிக்கியது. இத்தாக்குதலில் மேலும் 8 பாடசாலை மாணவர்கள் உட்பட 14 பேர் காயமடைந்தனர். படையினரின் ஆழ ஊருடுவும் படையினரே இத்தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். பெரியமடு மற்றும் தம்புள்ள பகுதிகளில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் போர் உக்கிரமான இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதையே காட்டுகின்றன. ஆனால் இரு பக்கங்களிலும் உள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்களும் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 04 ★ 09 ★ 1939



ஈசன் அடியில் 05 ★ 01 ★ 2008

திருமதி
### இராஜேஸ்வரி சிவலிங்கம்

கடந்த 05.01.2008 இல் ஈசனடி சேர்ந்த எமது அன்னையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி, தந்திமூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அன்பான நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (04.02.2008) திங்கட்கிழமை நடைபெறவுள்ள அன்னையின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

"சிவசோதி பவனம்"
வதிரி வீதி,
உடுப்பிட்டி.

(சி/551331)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.4

நவாலி வடக்கு-பெத்தனாச்சி நாச்சிமார் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் இடம் பெறும். (203-95)

* * *

யாழ்ப்பாணம், பெப்.4

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இவ்வாலயத்தில் பரிவாரமாக முருகன், வைரவர், சண்டேஸ்வரர் ஆலயங்களும் புதிதாக வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. (203-250)

## உள்ளூராட்சி சபைகளில் புதிய கட்டண விவரம்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளினால் அறவிடப்படும் ஆதனவரி தொடர்பான அறிவித்தல் படிவம் எழுதுதல், அறிவித்தல் படிவம் விநியோகித்தல், புதிய இடாப்பு எழுதுதல் ஆகியவற்றுக்கான கட்டண விவரத்தைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புதிய கட்டண விவரங்களை அறிவித்துள்ளார்.

புதிய பதிவேடு எழுதுவதற்கு ஓர் அலகிற்கு ஒரு ரூபாவும், அறிவித்தல் படிவம் எழுதுவதற்கு ஓர் அலகிற்கு ஒரு ரூபா ஐம்பது சதமும், அறிவித்தல் படிவம் விநியோகிப்பதற்கு ஓர் அலகிற்கு மூன்று ரூபாவும் வழங்கப்படல் வேண்டுமென வும் அறிவித்துள்ளார். (203-207)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வல்லிபுரம் நித்தியானந்தன்

(மருந்தாளர், சுகாதார நிலையம், யாழ்.பல்கலைக்கழகம்)

நித்தம் நித்தம் நித்தி என்றோம்
நித்தி என்று அழைப்பதில் ஆனந்தம்கொண்டோம்.
நித்தியானந்தா எங்கே சென்றாய்? என் செய்வோம்?
இவ்வுலகில் நித்தியானந்தமாய் வாழ்ந்த நீ
இறையுலகில் நித்தியானந்தம் அடையப் பிரார்த்திக்கின்றோம்
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

மருத்துவ அதிகாரியும்
உத்தியோகத்தர்களும்.

சுகாதார நிலையம்
யாழ்.பல்கலைக்கழகம். (70804)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரன் அன்னலட்சுமி
(அன்னக்கா)



அராலி மத்தி, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் அன்னலட்சுமி நேற்று (03.02.2008) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் யோகேஸ் வரன் (இந்து ஆலய கட்டட ஒப்பந்தகாரர்)அவர்களின் அன்பு மனைவியும் சாரங்கன், கேமினி (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.02.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.யோகேஸ்வரன்
(கணவர்-ஈஸ்வரன்)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர், ஆசிரியர்களை பெருமைப்பட வைத்துள்ள பரு.ஹாட்லிக் கல்லூரியின் ஜி.சீ.ஈ.உயர்தர மாணவர்கள்



''எமது மாணவர்கள் உயர்பெறுபேறுகளைப் பெற்றதன் மூலம் தம் கல்லூரித் தாயை பெரிதுவக்க வைத்திருக்கிறார்கள். தமது பெற்றோர், ஆசிரியர்களை பெருமைப்பட வைத்துள்ளார்கள். கல்லூரிச் சமூகம் அவர்களால் பூரிபடைகிறது; தலை நிமிர்ந்து நிற்கிறது. எதிர்காலத்திலும் அவர்கள் கல்வியில் உச்சநிலையை அடைந்து தமது உயர்பண்புகளால் எல்லோருக்கும் பணிபுரிவார்கள் என்பதில் ஐயமில்லை'' என்று கூறுகிறார் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் நடராசா தெய்வேந்திர ராஜா.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ (உயர்தரம்) பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கணிதப் பிரிவில் இரண்டு பேர், உயிரியல் பிரிவில் இருவர் மற்றும் கலைப்பிரிவில் மூவர் அடங்கலாக 7 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளனர். இதில் கணிதப் பிரிவில் விமலநாதன் ரஜீவன் என்ற மாணவன் மாவட்ட நிலையில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளார். அதே போன்று உயிரியல் பிரிவில் ஸ்ரீசோதிநாதன் நிமலன் என்ற மாணவன் மாவட்ட நிலையில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 42ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இந்த மாணவர்களின் சாதனை பற்றி கல்லூரி அதிபர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்தாவது:

க.பொ.த. (உ/த) பரீட்சை, மாணவரின் உயர்கல்வியைப் பொறுத்தவரை அதீத தாக்கத்தைச் செலுத்துகிறது. அவர்களின் எதிர்கால பாதையை தீர்மானிக்கும் ஒரு திறப்பு முனையாக அமைகிறது. எமது மாணவர்கள் இப் பரீட்சையில் உயர் சித்திகளைப் பெற்றுக்கொண்டமைக்காக தெரிவிக்கப்படும் பாராட்டுதல்களை எமது கல்லூரி அடக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறது. அத்தோடு இச்சித்திகளை தக்கவைத்து அதனை மேலும் உயர்த்த வேண்டிய பாரிய பொறுப்பும் எம்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் உணர்கிறோம்.

இம் மாணவர்களின் வெற்றிக்கு பல்வேறு காரணிகள் பின்புலமாக உள்ளன. இவர்கள் ஆசிரியர் கூறுவதை உள்வாங்கும் பக்குவத்தைப் பெற்றிருந்தனர். ஒவ்வொரு நாளும் தரமான வினாக்களைக் கொண்டு வந்து ஆசிரியர்களிடம் கேட்டுத் தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டனர். இதன் மூலம் சக மாணவர்களும் கூடுதல் பயனைப் பெறமுடிந்தது.

### பணிவு அவசியம்

எந்தவொரு மனிதனுக்கும் பணிவு உயர்ந்தோர் பண்பாகும். பணிவுக்கு பக்குவமான மனநிலை இருந்தாலே போதும். மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களது இப்பண்பு, ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கும் இடையேயான அந்நியோன்னியத்தையும் அக்கறையையும் அதிகரிக்கச் செய்கிறது. ஒருவர் சிறந்த கற்பித்தல் பணியை ஆற்றிவிட்டால் மட்டும் ஆசிரியராகி விட




முடியாது. ஒவ்வொரு மாணவனும் தனித்துவமானவன். அவர்களுடன் நெருக்கமாகப் பழகி அவர்களின் கஷ்டங்கள் பிரச்சினைகளை கேட்டறிந்து அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வழிப்படுத்தல் அவசியமானது. தமது பிரச்சினையைத் தெரிவித்து அதற்காக தீர்வை அல்லது வழி காட்டலைப் பெறலாம் என்ற நம்பிக்கை மாணவனுக்கு ஏற்படவேண்டும். அதற்கான கவின்நிலையை ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மாணவனிடத்தில் உண்மையான அன்பைச் செலுத்த வேண்டும். உண்மையான அன்பைச் செலுத்தும்போது ஆசிரியரின் கண்டிப்பும், தண்டிப்பும் அவனைத் திருத்துவதோடு அவர்பால் அவனை மேலும் நெருங்கி வரச்செய்யும். சலிக்காமல் அவனைத் திருத்த முயற்சிக்க வேண்டும். தம்மாலியன்ற மேலதிக உழைப்பை வழங்க வேண்டும். பாடசாலை முகாமைத்துவத்துடன் ஆசிரியர்கள் ஒதத்துழைக்க வேண்டும். ஆசிரியர்களின் கருத்துக்கு முகாமைத்துவம் மதிப்பளிக்க வேண்டும். ஒழுக்காறு தொடர்பான விடயங்களில் ஒவ்வோர் ஆசிரியரும் கவனம் செலுத்த வேண்டும். தாம் ஒரு முன்மாதிரி என்பதை மனதில் கொள்ள வேண்டும். பாடசாலையை இயக்குபவர்கள் ஆசிரியர்களே. அந்த வகையில் எமது கல்லூரி ஆசிரியர்களையிட்டு, நாம் நிச்சயமாகப் பெருமைப்பட முடியும்.

### தானாக உணர்ந்து படித்தல் வேண்டும்

எமது ஆசிரியர்களின் இடையறாத நீண்டகால உழைப்பின் அறுவடையாகவே இப்பெறுபேற்றைக் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக மாணவன் தானாக உணர்ந்து படிக்க வேண்டும். இவ் உணர்வு ஏற்படாதவரை வேறெந்தக் காரணியும் அவனில் தாக்கம் செலுத்த முடியாது. கஷ்டமான குடும்பச் சூழ்நிலையைக் கொண்ட மாணவன் அதனை விடு வித்து உயரவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். வசதியான குடும்பச் சூழலைக் கொண்ட மாணவன் அதனைத் தக்கவைத்து மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கைக் கொண்டிருக்க வேண்டும். எமது மாணவர்கள் இந் நிலையை மனதிலிருத்தியுள்ளனர்.

மாணவரின் அடைவு மட்டத்தின் உயர்வுக்கு ஒரு கல்லூரியின் ஒழுக்காறு தோன்றாக் காரணி என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எமக்குண்டு. மாணவர் பாடசாலையை தினசரி தரிசிக்க வேண்டும். தாம் பாடசாலை மாணவர் என்ற

## அவர்களின் சாதனைக்கான பின்னணியை பூரிப்புடன் விளக்குகின்றார் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா

உணர்வு இவர்களுக்கு ஏற்படவேண்டும். பாடசாலையை மாணவன் நேசிக்க வேண்டும். அவ்வாறே பாடசாலையும் மாணவனை நேசிக்க வேண்டும்.

பெற்றோர் வீட்டில் கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமானது. இதன்போது அவர்கள் பல்லேறு தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கும். தமது பிள்ளைகளின் நண்பர்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் வயதொத்த நல்ல நண்பர்களின் சகவாசமே அவர்களை உயர்த்தும்.

### பழைய மாணவரின் பங்களிப்பு

கல்வித் திணைக்களம், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் எமக்குப் பக்கபலமாக உள்ளன. மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெறும் மாணவருக்கு பழைய மாணவர் சங்கம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்து வருகிறது. உயர்பெறுபேறுகளும், அவற்றைப் பெறும் மாணவர்களுக்கு கிடைக்கும் கௌரவமும் அடுத்துவரும் பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதேவேளை சித்திபெறத் தவறும் மாணவர்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. க.பொ.த.(சா/த) பரீட்சையில் உயர்சித்திகளைப் பெற்றுவிட்டால்

**செவ்வி: யசிதரன்**

உயர்தரத்திலும் அவ்வாறே சித்திபெறலாம் என நினைப்பது பொருத்தமற்றது. கடின உழைப்பும் தொடர்ச்சியான பயிற்சியும் திறமையுடன் சேரும்போதை அவர்களது பெறுபேறு உயர்வடையும்.

மாணவன் தமக்கு ஆர்வமும் திறமையுமுள்ள பாடத்துறையை தெரிவு செய்தால் அத்துறையில் பிரகாசிக்க முடியும். அதனை விடுத்து பொருத்தமற்ற துறையை தெரிவு செய்வதன் மூலம் தமது வீழ்ச்சிக்கு தாமே அடிகோலுகின்றனர். தவறான தெரிவுக்கு மாணவர்களும், ஏன் சில சந்தர்ப்பங்களில் பெற்றோரும் காரணமாகி விடுகின்றனர். இதுவே சித்தியின்மைக்கு பிரதான காணியாக அமைந்து விடுகிறது.

### பயிற்சிப் பரீட்சைகள்

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் நாம் தனிப்பட்ட முறையில் கவனமும், கரிசனையும் செலுத்தி வருகின்றோம். பாடங்களை சிறு அலகுகளாகப் பிரித்து பயிற்சிப் பரீட்சை வைப்பதும் அவற்றைத் திருத்திக் கலந்துரையாடுவதும் சிறந்த பயனளிக்கும். மாணவர்கள் தற்போதைய நெருக்கடியான சூழலை தமக்கு சாதகமாக மாற்றியமைப்பதே இப் பெறுபேற்றினைப் பெற்றுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது- என்று கூறினார். ✱

---

# நெடுந் தொடர் நாடக நோயிலிருந்து குடும்பங்களை மீட்கும் வழி என்ன?



*சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னம்பியுடனான நேர்காணலின் ஒரு பகுதி கடந்த 30 ஆம் திகதி வெளியானது. மிகுதி இன்று தரப்படுகின்றது.*

பணியாற்றி வீடு திரும்பும் களைப்புற்ற பெற்றோரையும் மற்றவர்களையும் எங்கள் வீடுகளில் நெடுந்தொடர் நாடகங்களின் கதாபாத்திரங்களும், அவர்கள் பிரச்சினைகளும் முற்றாக உறிஞ் சிவிட்டன. குடும்ப நேரத்திட்டமிடல் ஒன்றை இல்லாமற் செய்து விட்டன. பல சமயங்களில் பிள்ளைகளுடன் ஈடுபாட்டுடன் உரையாடுவதை அவை தடுத்து விடுகின்றன. பிள்ளைகளின் பிரச்சினைகளை உண்மை ஈடுபாட்டுடன் கதைத்து, செவிமடுத்து, மாற்று ஏற்பாடு செய்ய விடாது தடைசெய்துவிடுகின்றன. பிள்ளைகளை ஒருதொந்தர வாக எண்ணும் படி யான மன உணர்வுகளைப் பெற்றோரிடம் திணித்துக் கொண்டிருக்கின்றன. பாடசாலையிலிருந்து வீடு வந்த பிள்ளையை வாஞ்சையுடன் எதிர்பார்த்து அரவணைக்கும் அன்னைப் பண்பை படிப்படியாக அழித்து வருகின்றன. பிள்ளைகள் தாமாகவே உடைமாற்றி, உணவருந்தி உடன்டியாகவே எங்கோ ஒரு தனியார் கல்விப் படிப்புக்கு சென்று விடுவதை பெற்றோர் மன விருப்பத்துடன் ஏற்கும்படி இந்த ''தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல் மோகம்'' அவர்களைக் கட்டாயப்படுத்துகிறது. வார நாள்கள் மாலையிலும், வார இறுதி நாள்களிலும் முழு பொழுது போக்கு நிகழ்ச்சி நிரலையும் தொலைக்காட்சியின் பல்வேறு அலைகளிலும் தந்து விடுகின்றன. அதற்கு கட்டுப்பட்டு தமது வீட்டுப் பணிகளை ஆற்றும் பெற்றோர்-குறிப்பாக த்தாய்மாரின் எண்ணிக்கை பெருகிவிட்டது. எமது பிரதேசத்தில் மின்னியல் பொழுது போக்கு மையங்கள் வளர்ச்சி பெறவில்லை. கொழும்பு போன்ற நகரங்களில் தாய்மார் தொலைக் காட்சிப் பெட்டிகளின் முன்னும் இளம் பிள்ளைகள் மின் னியல் பொழுது போக்கு நிலையங்களில் கணனிகளின் முன்னும் கட்டுண்டு கிடைப்பதைக் காணமுடியும். குடும்பத்தில் முழு நேரம், உறவு, பணம், ஊடாட்டம் போன்ற எல்லாவற்றையும் தன் கையகப்படுத்தி விட்ட அசுர வலிமை மிக்க சாதன மாகி விட்டது தொலைக் காட்சி.

எமது பிள்ளைகளின் பள்ளி வாழ்வு, தனியார் கல்வி நிறுவன கற்பித்தல் நிகழ்வுகள்,சகபாடிகளுட்னான உறவு முறைகள் போன்றவை பற்றியும் பெற்றோர் கலந்துரையாடுவதை தவிர்ப்பதற்கு இந்த தொலைக்காட்சி மேலாதிக்கம் மிக முக்கியமான காரணமாகிவிட்டது. மின் வெட்டு ஒன்றுதான் இதைக்கட்டுப்படுத்தக் கூடியதோ!

இந்த மின்னியல் மேலாதிக்கத்திலிருந்து தாய்மார் மீள்வதும் தமது நேரத்தில் கணிசமானதை தம் பிள்ளைகளுடனும் அளவளாவுவதிலும் மனம் திறந்து கதைப்பதிலும் குழந்தைப் பருவ குதூகலத்தை அவர்கள் அனுபவிக்க உதவுவதிலும் செலவிடுவதிலும் அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகி விட்டது. குடும்பத்தில் குடும்பமட்ட வேலை-பிள்ளைகளின்படிப்பு -பெற்றோர்-பிள்ளைகள் உரையாடல்- இயல்பான பொழுது போக்கு என்ற முறையில் குடும்ப மட்டத்திற்கு புதிய நேர அட்டவணை ஒன்று தயாரிக்க வேண்டும். இது ஒரு மின்னியல் கலாசார பரவும் நோயாகி விட்டது. சமூகமாக திட்டமிட்டு இதனை ஒழுங்கு படுத்தி தாய்மாரின் நேரத்தை பிள்ளைகளுக்கு திருப்பவும் கொடுத்தாலென்ன? மொத்த குடும்ப நன்மை அதிகரிக்குமல்லவா? எமது வளங்களை சுரண்டி எமது பிள்ளைக ளின் படிப்பையும் குடும்ப மகிழ்ச்சியையும் நீண்ட கால முன்னேற்றத்தையும் அழித்தொழிக்கும் நெடுந் தொடர் நாடக நோயிலிருந்து

## பிள்ளைகளைப் படிக்கச் செய்வது முதன்மையான தேவை

எம் குடும்பங்களை நிச்சயம் மீட்டாக வேண்டும்.

### பள்ளிகளின் பணி

பிள்ளைகளின் இரண்டாவது வீடு பள்ளிகள் தான். பள்ளிகளில் விடுதிகள் இருந்த காலத்திற்கு இது மேலும் பொருந்தும். பெற்றோர் வழங்க வேண்டியது சில உள்ளன. இதனை பிள்ளைகள் பள்ளிகளில் தனது ஆசிரியர்களிடமிருந்தும் தன் பள்ளித் தோழர்களிடமிருந்துதான் பெற்று மகிழ்கிறார்கள். இதனால்தான் பள்ளியில் படிக்கும் காலத்தில் பிள்ளையின் அபிமானப் பட்டியலில் தனக்கு விருப்பமான ஆசிரியரும் பள்ளி நண்பனும் முதலிடம் பெறுகின்றனர்.

வகுப்பறைகள் பிள்ளைகளின் சுய கட்டுப்பாட்டை வளர்க்கின்றன. ஆனால் சிந்திக்கக் கற்றுக் கொடுக்கின்றன. சிந்தனைக் கிளர்ச்சியை உருவாக்குகின்றன. மாணவன் தன்னை கனி வளம் நிறைந்த நிலமாக எண்ணி தன்னைத் தானே கிண்டிப் பார்த்து புதிய திறமைகளைத் தோண்டி எடுக்கின்றான். இதற்கு வழிகாட்டி உந்துதல் அளிப்பவர்கள் ஆசிரியர்களும் அவர்களது கற்பித்தலும் வகுப்பறையின் சூழலும் ஆகும்.

இன்று பாடசாலைக்குப் பதிலீடுகள் பெருகி விட்டன. மாற்று வகுப்பறைகள் கற்கும் மாற்றுச் சூழல்கள் பெருகிவிட்டன. பிள்ளைகளின் பிள்ளைப் பாராய வாழ்வு என்பது வீடு-பள்ளிக் கூடம்-தனியார் கல்வி நிறுவனம் என்று மூன்று தனங் களில் பரவிக்கிடக்கிறது. தனியார் கல்வி ஏற்பாடென்பது இன்று பெற்றோர், கல்வி யாளர், அரசாங்கம் ஆகிய எல்லோருடைய சம்மதத்துடன் வளர்ந்து வரும் சமாந்தரமான கல்வி ஏற்பாடு. இதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளோம். *(வளரும்)*

*நேர்காணல்:*
**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**



யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெற்ற தரம்- ஒன்று மாணவிகளின் கால்கோள் விழாவில், பாடசாலை அதிபர் அருட்சகோதரி நெவிஸ்லடிஸ்லோஸ் தரம் -ஒன்று மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து எடுத்துக் கொண்டபடம்.
(படம்: குருநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




*115ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் அபிவிருத்தியை நோக்கிய பயணவிழா நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலையின் முன் மண்டபத்தினையும் கரவெட்டிப் பிரதேச செயலர் சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் வைத்தியசாலையின் பெயர்ப்பலகையை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி திரைநீக்கம் செய்வதையும் மேல்வரிசையில் உள்ள படங்களிலும் காணலாம் - நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், பிரதான மண்டபத்தை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும், யாழ்.மாவட்ட எம்.எஸ்.எல்.வைத்திய அமைச்சின் உறுப்பினர் மலசலகூடக் கழிவுகளை நவீன முறையில் அழிப்பதற்கான ஆழியை இயக்கிவைப்பதையும் கீழ்வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.*

(படங்கள் : சுந்தர்)

# பாடசாலை கிரிக்கெட் சுற்றுப் போட்டி; சுன்னாகம் ஸ்கந்தா வெற்றிபெற்றது

வலி.வடக்கு,பெப்.4

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 40:3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய நிசாகர், கௌதமன் ஆகியோர் முறையே 23, 22 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் லக்சன் 13 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

மற்றும் நிரோகன், வல்லவன், நிரோசன் ஏரகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்கள்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 23:4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் விஸ்ணு 6:4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும் நிரோஜன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோகயக் கல்லூரி 55:1 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய லோறன்ஸ் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் தஜீவன், ஜீவன் ஆகியோர் முறையே 27, 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய நிரோஜன் 11 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 38 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் வல்லவன், நிரோசன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் கொக்குவில் இந்துக்கல்லூரி 30:5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய வல்லவன், நிருகன் ஆகியோர் முறையே 35, 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிரோசன் 9:5 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் விஜிதன் 05 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ரஜீவன் 06 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

(1-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மேரியோசப் சாந்தசீலனும்,சிறப்பு விருந்தினராக மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் திருமதி க.வைரவநாதனும் கலந்து கொள்வர். (1)

* * *

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் 75 ஆவது ஆண்டு பவளவிழா இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.00மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.நடராசாவும்,சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி தே.தயாபரராசாசவும் கலந்து கொள்வர்.கௌரவ விருந்தினர்களாக முன்பள்ளிகளின் ஆசிரியர்களான திருமதி கெ.வடிவாம்பிகை, செல்வி சி.சாந்தி, செல்வி யே.மேரிரமா ஆகியோரும் கலந்து கொள்வர். (1-86)

* * *

வலிவடக்கு,,பெப்.4

அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களின் மெய்வல்லுனர் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி சிவரூபி சொக்கலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய நிர்வாக அலுவலர் மா.கதிரமலைப் பிள்ளையும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கல்விக்கோட்ட நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சுபத்திராவும் கௌரவ விருந்தினராக கல்வாரி பூரண சுவிசேக தேவாலய போதகர் ஆமோஸ் அன்ரனியும் கலந்து கொள்வர் (203-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.4

அராலி வானவில் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி துணைவி சென்ஸ்டார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட் டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங் களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* அராலி பாரதி விளையாட்டுக்கழக பி அணி எதிர் அராலி ஐக்கிய விளையாட் [illegible]

* தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழக ஏ அணி எதிர் அராலி கலைவாணி விளையாட்டுக்கழக ஏ அணி. (203-86)

# வலிகாமம் வலயத்திற்கு இரண்டு உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள்

வலி.வடக்கு,பெப்.4

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த மாதம் முதல் இரண்டு உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

பல காலமாக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் இங்கு இல்லாமையால் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இணுவில் மத்திய கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியரான சிவராசா உடுவில், தெல்லிப்பளை கல்விக் கோட்டங்களுக்கும், இராமநாதன் [illegible] ஆசிரியராக இருந்த திருமதி க.கோசலை சண்டிலிப்பாய், சங்கா[illegible]களுக்கும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(203-86)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் புதிய நிர்வாகம் தெரிவு

வலி.வடக்கு,பெப்.4

யாழ்ப்பாணம் கிறிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் தற்காலிக தலைவர் டேவிற் தம்பிராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஆர்.செல்வராசாவும், செயலாளராக ந.சிவராசாவும் பொருளாளராக க.றொபேசனும் மற்றும் எட்டுப்பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சங்கம் 2005 ஆம் ஆண்டில் 13, 15, 17, 19 வயதினருக்கான 254 போட்டிகளுக்கும் -

2006ஆம் ஆண்டு 13, 15, 17, 19 வயதினருக்கான 137 போட்டிகளுக்கும் -

2007ஆம் ஆண்டு 13, 15, 17, 19 வயதினருக்கான 118 போட்டிகளுக்கும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றியுள்ளதாக செயற்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-86)

## விளையாட்டு அரங்குகளில்

## வலி.தெற்கில் விளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு,பெப்.4

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் மற்றும் தடகள விளையாட்டுப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்குகள் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக்கழகங்களையும் ஆண்கள் பெண்களுக்கென கலந்துகொள்ளவுள்ள போட்டிகளின் விவரங்களுடன் நிரல் ஒழுங்கில் கலந்து கொள்ளும்படி உடுவில் பிரதேச செயலக பதில் விளை யாட்டு அலுவலர் எஸ். சதீஸ்குமார் கேட்டுள்ளார்.

நிரல் ஒழுங்கு அன்று பட்டியல்களை சமர்ப்பிக்கும் கழகங்கள் மட்டுமே போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சுதந்திர தினச் சிந்தனை

காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற அறுபது ஆண்டுப் பூர்த்தியை இலங்கை இன்று கொண்டாடுவதை ஒட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்திருக்கின்றார்.

அதிலே -

''ஆசியாவிலேயே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நீண்ட மரபைக் கொண்டு தனித்துவமானவர்களாக நாம் திகழ்கின்றோம்.'' - என்று ஜனாதிபதி மஹிந்தர் பெருமிதம் பேசியிருக்கின்றார்.

அவர் கூறியவை முற்றிலும் சரியானவையே.

ஜனநாயக பிரதிநிதித்துவச் செயற்பாட்டில் மற்றைய நாடுகளில் இருந்து வேறுபட்டு தனித்துவமானவர்களாக இலங்கையர் இந்த அறுபது ஆண்டு காலத்தில் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றார்கள் என்பது வரிக்குவரி, உண்மையானதே.

இந்தியா போன்ற மிகப்பெரிய பிராந்திய வல்லாதிக்க நாடு இந்த ஜனநாயக முறையை மிளிரச் செய்து, தேச ஐக்கியத்தை அதன் மூலம் கட்டியெழுப்பி, தனது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தனது அபிவிருத்தியை உயரச் செய்து, முன்னோக்கி நகர, இலங்கையோ தலைகீழாக நடந்திருக்கின்றது.

ஜனநாயக ஆட்சி முறையின் பண்பியல்புகளில் மாண்புமிக்கவற்றைப் பயன்படுத்தாமல், பின்னடைவுக்குரிய அம்சங்களை மட்டும் பற்றிநின்று, நாட்டைக் குட்டிச் சுவராக்கி, அதன்மூலம் பிறநாட்டவர்களில் இருந்து வேறுபட்டுத் தனித்துவமானவர்களாகக் காட்சி தருகின்றார்கள் இலங்கையர்கள்.

பெரும்பான்மையினர் என்ற சாதகமான ஓர் அம்சத்தை மட்டும் வைத்துக்கொண்டு சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, அவலப்படுத்தி அவர்கள் மீது தமது அடக்குமுறையை வல்வந்தமாகத் திணிப்பதே ஜனநாயக ஆட்சிமுறையில் உள்ள கேவலத்துக்குரிய பின்புலமாகும்.

இந்த அறுபது ஆண்டு காலமும் ஜனநாயக ஆட்சியை நடத்தினோம் என்று கூறிக்கொண்டு தென்னிலங்கை நிர்வாகம் மேற்கொண்ட அராஜகத்தின் ஒட்டுமொத்த வடிவமுமே ஜனநாயக ஆட்சி முறையின் இந்தக் கேவலமான தன்மைதான்.

அதன் விபரீத விளைவாகவே அரசுத் தலைவர் இன்று தமது செய்தியில் விசனத்தோடு குறிப்பிடும் 'பயங்கரவாதம்' என்ற கொடூரத்தைக் கொழும்பு அரசு எதிர்கொண்டு நிற்கின்றது.

கொழும்பின் ஆட்சி அதிகாரத்துக்கு எதிரான தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை கொடூரப் பயங்கரவாதமாகச் சித்திரித்து அதைப் பூண்டோடு ஒழிப்பது குறித்து மேற்படி வாழ்த்துச் செய்தியில் செருக்கோடு அறிவிப்பு விடுத்திருக்கும் அரசுத் தலைவர், அந்தப் 'பயங்கரவாதம்' தோற்றுவதற்கும், வளர்ச்சியடைந்து விஸ்வரூபம் எடுத்து இந்த ஆட்சியை ஆட்டிப்படைப்பதற்கும் காரணமான அம்சங்கள் குறித்தோ, அவற்றை நீக்குவதற்கான தமது உத்தேசத் திட்டங்கள் குறித்தோ அறிவிக்காமல் தவிர்த்தமை விசனத்துக்குரியது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ்த் தாயகத்தில் கொடூரமாகக் கட்டவிழும் அரச பயங்கரவாதம், தமிழர்களுக்கு'எதிரான அடக்குமுறைகள், கெடுபிடிக் கொடூரங்கள் போன்றவை குறித்தெல்லாம் இந்த வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி எதுவுமே குறிப்பிடவில்லை.

ஜனநாயகம் என்பது மக்களினால், மக்களுக்காக, மக்களைக்கொண்டு முன்னெடுக்கப்படும் ஆட்சி முறைமை என்று சிலாகித்துக் கூறப்பட்டாலும், சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, அவர்களது தாயகத்திலேயே அவர்களை அடிமைப்படுத்தி இழிவுபடுத்துவதற்கான கீழ்தர அம்சங்களும் அந்த ஜனநாயகப் பண்பியல்புகளில் ஓர் அடிப்படை அம்சமாகப் பற்றி நிற்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

அந்தப் பண்பியல்பிலிருந்து வெளிப்பட்டு, சிறுபான்மையினரின் வாழ்வியல் உரிமைகளையும், நீதியான அபிலாஷைகளையும், கௌரவ வாழ்வையும் மதித்துப்பேணி நடைமுறைப்படுத்துகின்ற ஓர் உறுதிப்பாட்டை ஜனநாயகம் நிலை நிறுத்தாதவரை, அந்த ஜனநாயகமும், அந்த ஜனநாயகத்தின் கீழான 'சுதந்திரமும்' போற்றப்படத்தக்கனவேயல்ல. அதனை நாம் மறந்து, சுதந்திரம் குறித்து இன்றைய நாளில் பீற்றுவது வெறும் வாய்ச் சவடாலாக இருக்கலாமே தவிர, உண்மையில் நெஞ் சார மெச்சத்தக்கதேயல்ல.

இலங்கைத் தீவில் இன்று பௌத்த, சிங்களப் பேரினவாத அடக்கு முறைக்கும், மேலாண்மை அதிகாரத் திமிருக்கும் முழு அளவில் வழி செய்து நிற்பது ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேறும் கேலிக்கூத்தும், அதனை வழி நடத்தும் இந்த ஒற்றையாட்சி அரசியல் முறைமையும்தான் என்பதும் தெளிவு.

இலங்கைத் தீவில் தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்ற இரு தேசியங்கள் மத்தியில் நல்லிணக்கமும், சமரச வாழ்வும் ஏற்படுவதைச் சாத்தியமற்றதாக்கி, இன முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தி, சிறுபான்மையினரிடையே சுயநிர்ணய போராட்டத்தைத் தீவிரப் படுத்துவதைத் தவிர வேறு மாற்று வழியே இல்லை என்ற ஒரு வழிப்போக்கை உறுதிப்படுத்தியதும் -

சிறுபான்மையினரை ஆயுத, வன்முறைப் பலத்தால் அடக்கி ஆள்வதன் மூலம் மேலாண்மைத் திமிரைப் பலப்படுத்தும் நிலைப்பாட்டை தென்னிலங்கைச் சிங்களத்துக்கு மேலும் வழங்கியதும்தான் -

இந்த அறுபது ஆண்டுகால சாதனை. அதில் புளகாங்கிதம் கொள்வதற்கு என்ன இருக்கிறது.?



ஏழாலையில் வானொலி திருத்தும் கடை ஒன்றில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரவு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலி மற்றும் சி.டி.பிளேயர்கள் என்பன திருட்டுப் போயுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட கடைக் கட்டடத்தில் அமைந்துள்ள சமுர்த்தி அலுவலகமும் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஆவணங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சமுர்த்தி அலுவலகத்தில் ஆவணங்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பதையும் வானொலி திருத்தும் கடையினுள் பொருள்கள் வீசப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : நேசன்)*

## பிரிட்டன் செல்வதற்கான விசா அனுமதி இனிமேல் சென்னை அலுவலகத்தினால் வழங்கப்படும்

### இந்திய விசாவுக்கு தனியார் நிறுவனத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்

கொழும்பு,பெப்.4

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் விசாப் பிரிவு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியில்இருந்து மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகத்தின் விசாப்பிரிவு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து மூடப்படவுள்ளதுடன் விசாக்கள் வழங்குவதும் நிறுத்தப்படவுள்ளன.

பிரித்தானியாவுக்குச் செல்ல விரும்பும் சிறிலங்கா மக்கள் சென்னையில் உள்ள விசாப் பிரிவில் விசாக்களை பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு விசாப் பிரிவு விண்ணப்பப் படிவங்களைத் தொடர்ந்தும் விநியோகிக்கும் ஆனால் பூர்திசெய்யப்பட்ட படிவங்கள் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதுடன், அங்கிருந்தே விசாக்கான அனுமதிகள் அனுப்பப்படும்.

மேலும் விசாக்களுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2008ஆம் ஆண்டு எல்லைகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பிரித்தானிய அரசாங்கம் நிதியை அதிகம் செலவிடவும் உள்ளது.

உயர்தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான (Highly Skilled Migrant) விண்ணப்பக் கட்டணம் 400 ஸ்ரேலிங் பவுண்ஸ்களில் இருந்து 600 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழில் அனுமதிப்பத்திரம் மற்றும் நீண்டகால விருந்தினர் விசாக்களுக்கான ( Works Permit visas and long term visitor visas ) கட்டணம் 200 ஸ்ரேலிங் பவுண்ஸ்களிலிருந்து 205 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விருந்தினர் விசாக்களுக்கான கட்டணம் 63 ஸ்ரேலிங் பவுண்ஸ்களில் இருந்து 65 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து இந்தியாவுக்குச் செல்லம் பயணிகள் இந்தியாவுக்கான விசாக்களை 'வி.எஃப்.எஸ் லங்கா பிரவேற் லிமிட்டற்' நிறுவனத்திலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு தேர்தல் குறித்து அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சம்

### 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் தகவல்

மட்டக்களப்பு,பெப்.4

மட்டக்ககளப்பு மாவட்டத்தில் இடம்பெறவுள்ள தேர்தல் குறித்து அங்குள்ள பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சுதந்திரமான - நியாயமான தேர்தலை கண்காணிக்கும் அமைப்பான 'பவ்ரலி'ன் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ இப்படித் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பு தொடர்பான ஆரம்பப் பணிகளை மேற்கொள்வதற்காக மட்டக்களப்புக்குச் சென்றுள்ள 'பவ்ரல்' அமைச்சின் தலைவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை றொட்றிகோ சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போதே றொட்றிக்கோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இத்தேர்தல் தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மக்களில் அதிகமானோர் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை. அக்கறையும் கொள்ளவில்லை. கடந்த 20 வருட காலங்களில் 25 இற்கும் மேற்பட்ட தேர்தல்களை பவ்ரல் அமைப்பு கண்காணித்துள்ளது.

அந்த அனுபவத்தின் அச்சுறுத்தலின் பேரில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டமை தொடர்பாக முறைப்பாடுகள் இந்த முறைதான் முதல் தடவையாகக் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்த போதும் அவராலும் எதுவும் செய்ய முடியவில்லை - என்றார் கிங்ஸ்லி றொட்றிக்கோ. (அ-2)

## அமைச்சர் பெர்னாண்டோ புள்ளேக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்?

கொழும்பு,பெப்.4

நீதிமன்றத்தை அவமதித்ததாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு ஐ.தே.கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள சோதனை நிலையங்களை அகற்றுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவை விமர்சித்த அமைச்சர் நாடாளுமன்றமே சட்டத்தை இயற்றுகிறது. அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுதான் நீதிமன்றத்தின் பொறுப்பு என்று கூறியிருந்தார்.

இவ்வாறு நீதிமன்றத்தை விமர்சித்த அமைச்சர் சோதனை நிலையங்கள் இருந்திருந்தால் அமைச்சர் திஸநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஆகியோரின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் கூறியிருந்தார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்ததன் மூலம் நீதிமன்றத்தை அமைச்சர் அவமதித்துள்ளார் என்ற குற்றச்சாட்டுடன் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்ய ஐ.தே.கட்சியின் சட்டத்தரணி உப்புல் ஜயசூரிய நடவடிக்கை எடுத்துள்ளார். (அ-1)

## புலிகள் மீதான தடையை நீடிப்பதா? தமிழக மக்களிடம் வாக்கெடுக்குக!

### திருமாவளவன் வலியுறுத்தல்

புதுடில்லி,பெப்.4

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து ஆறரைக் கோடி தமிழ்நாட்டு மக்களிடத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவுக் கடற்பரப்பில் கண்ணிவெடி புதைப்பு மற்றும் தமிழக மீனவர்கள் சிறைப்பிடிப்பு ஆகியவற்றுக்காக இலங்கை அரசு மீது இந்திய அரசு போர்தொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் சென்னையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தலைமை வகித்தார்.

திருமாவளவன் சிறிலங்காவைக் கண்டித்து கோஷங்களை எழுப்ப திரண்டிருந்தோரும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்தனர். (அ-2)

## நாளை

| | |
|---|---|
| தை - 22 | செவ்வாய்க்கிழமை 05.02.2008 |
| திதி : திரயோதசி காலை 9.40 | |
| நட்சத்திரம் : | பூராடம் காலை 7.40 வரை |
| சுபநேரம் : | 11.05 - 12.35 |
| ராகுகாலம் : | 03.35 - 05-05 |

## மக்களை விழிப்பாக இருக்குமாறு கேட்கின்றனர் பொலிஸார்

கொழும்பு,பெப்.4

தெற்கு மக்களின் நாளாந்த வாழ்க்கையைக் குழப்புவதற்காக பயங்கரவாதிகள் நாசக்கார நட வடிக்கைகளில் ஈடுபடலாம். எனவே சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பாகவும் அநாதரவாகக் காணப்படும் பொதிகள் தொடர்பாகவும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.கே. இலங்கக்கோன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

தம்புள்ள சம்பவம் தொடர்பாக ஊடகவியாலாளர்களுக்கு. தகவல் தெரிவிக்கையில் -

தெற்கு மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தவும் அவர்களது நாளாந்த வாழ்க்கையை குழப்பவும் பயங்கரவாதிகள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள்.

எனவே மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். அவர்களின் நடமாட்டம்காணப்பட்டாலோ, அநாமதேய பொதிகள் காணப்பட்டலோ உடன் தகவல் தர வேண்டும் - என்று கூறினார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் கலந்துரையாடல்

வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழக நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இந்த ஆண்டுக்கென பிரதேச விளையாட்டுவிழா ஒழுங்குகள் தொடர்பாக ஆரயப்படவுள்ளது என்று பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (1-2)


## இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிப்பான செய்தி!!!

**சுத்தமான தேங்காய்ப் பால் கிறீம்!**

தேங்காயின் விலை உயர்ந்துள்ள இந்நிலையில் ஒரு தேங்காய்ப்பால் அளவான கிறீம் (50 கிராம்).
பைக்கற் 23/= விலையில்
ஒரு பைக்கற் கிறீமினை மூன்று சில்வர் கப் சுடுதண்ணீரில் கரைப்பதன் மூலம் மூன்றுகப் முதல்தரப் பாலினைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
**அம்பிகை களஞ்சியம்**
304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70795)


## கண்ணீர் அஞ்சலி



கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய தர்மகர்த்தாவும் துடிப்புமிக்க சமூக சேவையாளருமான

**முருகர் செல்லக்குட்டி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாங்களும் இணைந்து கொண்டு அவரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

**கருகம்பனை -கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பரிபாலன சபையினர்.**

(70791)

## கண்ணீர் அஞ்சலி



**உயர்திரு. க.தர்மலிங்கம்**
**(பன்னாலை வாசம், தாவடி)**

02.02.2008 அன்று காலமான எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய க.தர்மலிங்கம் ஐயா அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தும் அதே வேளை அன்னாரின் மறைவால் ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் குடும்பத்தவரின் சோகத்திலும் பங்குகொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

35-2/2, விவேகானந்த வீதி,
வெள்ளவத்தை.

**கே.என்.இராஜரட்ணம் குடும்பம்.**

(70793)

## கண்ணீர் அஞ்சலி



நாடறிந்த சமூக சேவையாளர்
உயர்திரு.
**முருகேசு சபாநாதன்**
(சமாதான நீதவான் J.P.U.M)
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் மற்றும் உறவுகளுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலில் சாந்தி பெறுவதாக.

**வாழ்வகசமூகம்**
**சபாபதி வீதி, சுன்னாகம்.**

(சி/551352)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை திருமதி **அறிவழகி ஸ்ரீஸ்கந்தராசா** அவர்களின் அன்புத்தாய்

திருமதி
**வாலாம்பிகை பஞ்சாட்சரம்**

அவர்களின் மறைவையொட்டி அவரது துயரில் நாமும் கலந்து ஆத்ம சாந்திக் காகப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்,**
**யாழ்.இந்துமகளிர் கல்லூரி.** (70794)

### பணியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் மூன்று சங்கப் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சி.மகேந்திரன், அ.இம்மனுவேல், க.கிருஷ்ண சாமி ஆகிய பணியாளர்களே பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர், இயக்குநர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (203-224)

### கூட்டுறவு உத்தியோகத்தர் நால்வருக்குத் தரமுயர்வு

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இல் பதவி வகித்த நான்கு பேர் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக தரம் உயர்த்தரப்பட்டுள்ளனர்.

எஸ்.கணேசு, ரி. என்.ராஜா, ஆர்.பாலச்சந்திரன், பி.மோகன் ஆகிய நான்கு பேரும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (203-224)

### கலந்துரையாடல்

ஆங்கிலடிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்பட்டப்படிப்பு மற்றும் குழுப்படம் பெறுதல்போன்ற விடயம் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு அனைவரையும் வருகை தருமாறு தலைவர் கேட்டுள்ளார். (203)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**செல்லப்பா பொன்னுத்துரை**

தோற்றம் 25.12.1918
மறைவு 05.01.2008

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.02.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ.சூரியகுமார்,
"ஆனந்தபதி",
கற்பகப்பிள்ளையார் வீதி,
இருபாலை, கோப்பாய். (70784)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
T.P.: 021 2225083

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

செல்வி
**தம்பியப்பு ஞானரத்தினம்**
(வடமூலை, வசாவிளான்)

மண்ணில் 15.09.1936
விண்ணில் 06.01.2008



எமது சகோதரியின் துயரச்செய்தி கேட்டு உடன்வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் அவரின் இறுதிப் பணயத்திலும் ஆன்ம இளைப்பாற்று வழிபாட்டிலும் கலந்து கொண்டவர்களுக்கும் இக்காலப் பகுதியில் தங்களின் சகல உதவி, ஒத்தாசைகள் செய்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (05.02.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து எமது இல்லத்தில் நன்றி வழிபாடும் மதியபோசனமும் இடம்பெறும். இந்நிகழ்வு களில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எ.நித்தியானந்தராசா,
ஏழாலை கிழக்கு, ஏழாலை. (70788)

**சகோதர, சகோதரிகள், குடும்பத்தினர், உறவினர்.**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

956 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் **10 29 47 55**

01-02-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5477632 - 5493148

ஜக்பொட் பரிசு ரூபா. 5,610,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,977 | 10/- | 3,419,770/- |
| 2 இலக்கங்கள் | 31,385 | 20/- | 627,700/- |
| 1 இல. + லக்கினம் | 31,228 | 30/- | 936,840/- |
| 2 இல. + லக்கினம் | 2,869 | 100/- | 286,900/- |
| 3 இலக்கங்கள் | 845 | 500/- | 422,500/- |
| 3 இல. + லக்கினம் | 70 | 5,000/- | 350,000/- |
| 4 இலககங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,610,400/- | - |
| மொத்தம் | | | 6,443,710/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 408,383 | | 7,467,210/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,992,300/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 5480583-1-82 |
| மொனராகலை | 5492063-5-70 |
| கொழும்பு | 5489213-0-03 |
| இரத்தினபுரி | 5482302-2-20 |
| அனுராதபுரம் | 5488363-9-00 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தரப்புத் தொடர் முதல் போட்டி

# ஆஸி. – இந்தியா மோதல் மழையால் கைவிடப்பட்டது



பிரிஸ்பேன், பெப்.04

கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடரின் ஆஸ்திரேலியா, இந்தியா அணிகளுக்கிடையேயான முதல் போட்டி மழை காரணமாக இடை நடுவே கைவிடப்பட்டது. முடிவில் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்தியா 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக கம்பீர் 39 ஓட்டங்களையும் டோனி 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஆஸியின் பந்துவீச்சில் பிரட்லீ 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

ஆஸி.அணி இலக்கைக் கலைத்த பொழுது மூன்று தடவைகள் ஆட்டத்தை மழை குழப்பியது. தொடர்ந்தும் மழை அச்சுறுத்தியதால் போட்டியைக் கைவிடுவதாக அணித் தலைவர்களுடனான ஆலோசனையின் பின் நடுவர்கள் அறிவித்தனர். அப்போது ஆஸ்திரேலியா 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மழை குழப்பியதால் முன்னதாக ஆஸியின் வெற்றி இலக்கு 20 ஓவர்களில் 141 ஓட்டங்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

# டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஸ்கொட் ஸ்ரைரிஸ் ஓய்வு



வெலிங்டன், பெப்.04

ஆஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் தென்னாபிரிக்காவின் டிப்பென்னர் வரிசையில் தற்போது நியூஸிலாந்தின் ஸ்கொட் ஸ்ரைரிஸும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுகின்றார் என அறிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதற்காகவே இந்த முடிவை தான் எடுத்தாரென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் மிகவும் கடுமையாகவும் உடலளவில் களைப்பை ஏற்படுத்துவதாகவும் மாறி வருகின்றன. ஒருநாள் போட்டிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் தொடர்ந்தும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தீர்மானித்துள்ளேன் ஸ்ரைரிஸ் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத் தொடக்கத்தில் ஸ்கொட் ஸ்டைரிஸ் முதுகு வலியால் அவதிப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதால் ஏற்படும் காயங்களால் த்தான் கிரிக்கெட் விளையாட முடியாமல் சிரமப்பட்டாரென அவர் தெரிவித்துள்ளார். தெரிவிக் குழுவினருடன் இது குறித்து சில காலமாக ஆலோசனை செய்து வந்தார் என்றும் அவர் கூறியுள்ளார். ஸ்கொட் ஸ்ரைரிஸ் 29 டெஸ்ட்களில் விளையாடி 1,586 ஓட்டங்களை 5 சதங்களுடன் பெற்றுள்ளார்.




# சைமண்ஸ் ஆவேசம்

பிரிஸ்பேன், பெப்.04

ஹர்பஜன்சிங் விவகாரத்தில் தன் மீது நீதிபதி தெரிவித்துள்ள குற்றசாட்டு தனது இரத்தத்தைக் கொதிக்கச் செய்கிறது என்று ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி வீரர் அன்ட்ரூ சைமண்ஸ் ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

சிட்னியில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் போது இந்தியச் சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங். சைமண்ஸை குரங்கு என்று விமர்சித்தாரெனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதனைத் தொடர்ந்து ஹர்பஜன் சிங்கிற்கு 3 போட்டிகளில் விளையாட சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி ஜோன் ஹான்சன், ஹர்பஜன் சிங்கிற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உத்தரவிட்டார்.

மேலும் சைமண்ஸின் தூண்டுதல் காரணமாகவே ஹர்பஜன்சிங் அவரை விமர்ச்சித்தார் எனவும், ஜோன் ஹான்சன் கூறியிருந்தார். நீதிபதியின் இந்தக் கருத்தை அன்ட்ரூ சைமண்ஸ் கடுமையாக எதிர்த்துள்ளார். தனது நடத்தை குறித்து யாராவது கேள்வி எழுப்பினால் அது தனது இரத்தத்தைக் கொதிப்படைய செய்வதாக சைமண்ஸ் தெரிவித்துள்ளார்.

# தொடரை முழுமையாக அள்ளியது பாகிஸ்தான்

## 5ஆவது போட்டியிலும் சிம்பாப்வே 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வி

செய்குபுரா, பெப்.04

சிம்பாப்வேக்கு எதிரான கடைசி மற்றும் 5ஆவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பதிவுசெய்தது. இந்த வெற்றியின் மூலம் ஒரு நாள் தொடரை 5-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் முழுமையாகத் தனதாக்கிக்கொண்டது.

பாகிஸ்தான் சென்றுள்ள சிம்பாப்வே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதல் நான்கு போட்டியில் வென்ற பாகிஸ்தான் தொடரில் 4-0 என்ற முன்னிலையில் இருந்தது. நேற்றுமுன்தினம் ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி செய்குபுராவில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடியது. மிரட்டலாகப் பந்துவீசிய பாகிஸ்தானின் இளம் ரியாஸ், ராவ் கூட்டணி சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர்களைத் திணறச் செய்தது. இவர்களது பந்துவீச்சில் மஸகட்ஸா (5), கொலின் வில்லியம்ஸ் (19), தைபு (6) விரைவில் வெளியேறினர். பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய பிரன்டன் ரெய்லர் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து, அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை 2 ஓட்டங்களால் நழுவ விட்டார். இவருக்கு சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய சிகும்பரா 34 ஓட்டங்களை எடுத்தார். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் வெளியேற, சிம்பாப்வே 45.4 ஓவர்களில் 181 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

எளிய இலக்கைக் கலைத்த பாகிஸ்தானுக்கு ஆரம்ப வீரரான ஜம்ஷத் (19) விரைவில் வெளியேறி, ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த யூனிஸ், மன்சூருடன் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக விளையாடிய இந்த ஜோடி சிம்பாப்வேயின் பந்துவீச்சை வெளுத்து வாங்கியது. அதிரடியாக விளையாடிய யுனிஸ்கான் ஒரு சிக்ஸர், 8 பவுண்டரிகள் உட்பட 51 பந்துகளில் 63 ஓட்டங்களை எடுத்தார். அறிமுகப் போட்டியில் அசத்திய மன்சூர்(50) அரைச்சதம் கடந்தார்.

சிறப்பாக விளையாடிய மிஸ்பா சிக்ஸர் அடித்து, அணிக்கு வெற்றி தேடித் தந்தார். பாகிஸ்தான் 31ஆவது ஓவரில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 187 ஓட்டங்களை எடுத்து, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. மிஸ்பா 31 ஓட்டங்களுடனும், பவாட் அலாம் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் தொடரை பாகிஸ்தான் 5-0 என முழுமையாகக் கைப்பற்றியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக யுனிஸ் கானும், தொடரின் சிறப்பாட்டக்காரராக சொய்ப் மலிக்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# தமிழகத்தில் புலி ஆதரவு தீவிரமடையாமல் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்

## கலைஞரிடம் வேண்டுகோள் விடுத்து நிதியமைச்சர் சிதம்பரம் பேச்சு

சென்னை, பெப்.04

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் செயற்பாடு தமிழகத்தில் மேலும் வளரவிடாமல் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் இணையும் விழா, இழந்த ஆட்சியை மீட்கும் விழா, குமரி மாவட்ட காங்கிரஸின் புரட்சி விழா ஆகிய முப்பெரும் விழா நாகர்கோவில் நாகராஜா கோவில் திடலில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது. விழாவுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், கைத்தொழில்துறை இணை அமைச்சர் இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் நிதியமைச்சர் ப.சிதம்பரம் பேசும்போது கூறியவை வருமாறு:-

''விடுதலைப் புலிகள் இயக்கம், தடை செய்யப்பட்ட இயக்கம். 1984இல் இராஜீவ் காந்தி இலங்கை சமாதானம் குறித்துப் பேசும் போதெல்லாம் நானும் உடன் இருந்திருக்கிறேன். சென்னையில் நள்ளிரவு வேளையில் நானே தனியாக கார் ஓட்டி பிரபாகரன் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று பேசியிருக்கிறேன். இலங்கையில் அமைதி திரும்பத்தான் ராஜீவ்காந்தி நடவடிக்கை எடுத்தார்.

இலங்கையில் பேச்சு நடக்கும்போது ஒரு



இராணுவ வீரன் ராஜீவ் காந்தியின் தோளில் அடித்தான். இலங்கைத் தமிழருக்காக அவர் அதைத் தாங்கிக் கொண்டார். அமைதி ஏற்படுத்த அவர் மேற் கொண்ட முயற்சிகளை நாங்கள் மறக்கவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுகிறவர்களுக்கு அந்த வரலாறு தெரியாது. தமிழ் மக்கள் மீது ராஜீவ் காந்தி வைத்திருந்த எல்லையில்லா அன்பு அவர் கொலை செய்யப்படும் அளவுக்குக் கொண்டுசென்றுவிட்டது.

''அவரது படுகொலைக்குக் காரணமான, தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தக்கு ஆதரவாக நிதி திரட்டுதல், உதவி செய்தல், பணம் அனுப்புதல் போன்ற செயல்கள் நடந்துவருகின்றன. இந்தச் செயல்கள் எல்லாம் மத்திய அரசுக்குத் தெரியாமல் இல்லை. தமிழக அரசுக்கு உளவுத்துறை என்ன தகவல்கள் தருகிறார்களோ அதேபோல் மத்திய அரசுக்கும் உளவுத்துறையினர் தகவல் தருகிறார்கள்.

எனவே, கலைஞர் அவர்களே இந்தப் பிரச்சினையில் உங்களுக்கே உரிய சாதுரியத்துடன், கவனத்துடன் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். சட்டப்படி நடவடிக்கைகள் எடுங்கள் என்று கேட்கிறேன். மேலும் வளர்ந்து விடாமல், தீவிரம் அடைந்துவிடாமல் முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என்று கேட்கிறேன்.'' - என்றார்.

# கென்யாவில் உடன்பாடு

நைரோபி, பெப்.04

கென்யாவில் நடந்து வரும் வன்முறை சம்பவங்களுக்கு முடிவு கட்ட கென்ய அரசு - எதிர்க்கட்சி இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் தலைமையிலான ஆபிரிக்க சமாதானக் குழு, கென்யா சென்றிருந்தது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இடையே சமரசப் பேச்சு நடத்தியது. கோபி அனான் எடுத்த முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்தது.

# ஆட்சியை இழக்கத் தயார்!

## சிதம்பரத்துக்கு கருணாநிதி பதில்

சென்னை, பெப்.04

தமிழகத்தில் ஆட்சியை இழக்கத்தான் எப்பொழுதும் தயாராக இருக்கிறார் எனக் கூறியுள்ள முதலமைச்சர் கருணாநிதி, நிதியமைச்சர் சிதம்பரம் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து வெளியிட்ட கருத்துகளுக்கு வருத்தம் தெரிவித்திருக்கின்றார்.

அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற திருமண விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் கருணாநிதி, காங்கிரஸ் தலைவர்கள் முன்னிலையிலேயே காங்கிரஸாருக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்துப் பேசினார். சிலர் சதி செய்தே இந்த ஆட்சியைக் கவிழ்க்க நினைக்கிறார்கள். அதற்கு காங்கிரஸார் துணைபோகக் கூடாது என்றும் எச்சரித்தார்.

அங்கு கருணாநிதி மேலும் கூறியவை வருமாறு:-

''நாகர்கோவிலில் நேற்றுமுன்தினம் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், கிருஷ்ணசாமி, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்றோர் தமிழகம், விடுதலைப் புலிகளின் வேட்டைக் காடாக ஆகிவிட்டது என்று பேசியிருக்கிறார்கள். அதற்காக நான் வருந்துகிறேன்.

விடுதலைப் புலிகளாக தமிழகம் மாறக் கூடிய சூழல் வந்தால் அதனைத் தடுத்து நிறுத்துவது காங்கிரஸின் கடமை மட்டுமல்ல, தி.மு.க., பா.ம.க., சி.பி.ஐ., சி.பி.எம்., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அனைத்துத் தோழமைக் கட்சிகளுக்கும் அந்தப் பொறுப்பு உள்ளது. கூட்டணியில் இருக்கிறதா? இல்லையா? என்ற தளம்பல் இருந்தாலும் கூட விடுதலைச் சிறுத்தைகளுக்கும் அந்தப் பொறுப்பு உள்ளது.

இன்று (ஞாயிறு) காலை பத்திரிகைகளை படித்ததும் நான் அமைச்சர் ப.சிதம்பரத்திடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன்.

காங்கிரஸின் தள கர்த்தர்களாகிய நீங்கள் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் அராஜகம் செய்வதற்கு வழிவகுத்தது போல நாகர்கோவிலில் பேசியிருக்கிறீர்கள். இது சரியில்லை என்று கூறினேன். அதற்கு சிதம்பரம், நீங்கள் இந்தப் பிரச்சினையை மிக சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள்; திறமையாகக் கையாளுவீர்கள் என்றுதான் குறிப்பிட்டேன் - என்று கூறினார்.

யார் யார் தேசவிரோத காரியங்களில் ஈடுபடுகிறார்களோ அவர்களை தி.மு.க. அரசு மன்னிக்காது, மன்னிக்காது, மன்னிக்காது. இப்படி மூன்று முறையல்ல; 30 முறையல்ல; 300 முறை சொல்வேன். அவர்களை நாங்கள் நிச்சயம் மன்னிக்கமாட்டோம்.

எங்கள் மீது வீண்பழி சுமத்தி இந்த ஆட்சியை மாற்றவேண்டும் என்று விரும்பினால், அந்த ஆட்சி மாற்றத்தைச் சந்திக்கவும் நான் தயாராக இருக்கிறேன். எனவே, இந்தவித செயல்களில் நீங்கள் (காங்கிரஸ்) ஈடுபட வேண்டாம். அதுதான் உங்களுக்கும் நல்லது, இந்த நாட்டிற்கும் நல்லது'' - இவ்வாறு கருணாநிதி பேசினார்.

# சாட் தலைநகர் கிளர்ச்சியாளர் வசம்

ஜமேனா, பெப்.04

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சாட்டின் தலைநகர் ஜமேனாவைத் தம் வசம் கொண்டு வந்துள்ளனர் என அறிவித்துள்ள அந்த நாட்டின் கிளர்ச்சிக்காரர்கள், ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி வளைத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கிளர்ச்சிக்குழுவின் பேச்சாளர் தாங்கள் முழுமையாக அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர் என்றும், அரச படையினர் போரிட மறுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கிளர்ச்சிக்காரர்கள் நகரத்திற்குள் நுழைந்தமையைத் தொடர்ந்து கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. சூடானுடனான சாட்டின் கிழக்கு எல்லையிலிருந்து அவர்கள் முன்னேறியுள்ளனர். நகரில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் 30 [illegible] கள் எரியுண்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் விரும்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது இந்நாட்டில் வாழும் மக்கள் பயங்கரவாதமற்ற சுதந்திர இலங்கைக்குள் தாம்விரும்பிய பிரதேசத்தில் விரும்பியவாறு வாழக்கூடிய காலம் நெருங்கி வருவதை உணர்த்துவதாக இருக்கின்றது.

சுதந்திர தினத்தையொட்டி யாழ்.படை களின் தளபதி மேஜர் ஜெனரல ஜி.ஏ.சந்திரசிறி விடுத்துள்ள சுதந்திர தினச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய காலணித்துவ நாடாக இருந்த எமது நாட்டிற்கு 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி டொமினிக் முறையிலான சுதந் திரமும் பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவமும் கிடைத்தன. அந்த சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக இந்நாட்டின் தலைவர்கள் மேற்கொண்ட போராட்டத்தின் போது இன, மத பேதங்கள் இருக்கவில்லை. அவர்கள் மனங்களிலே இந் நாட்டுப் பிரஜைகள் என்ற மனப்பான்மையும் அந்நியநாட்டின் காலணி ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந் திரமாக தமது நாட்டில் வாழவேண்டும் என்ற பொது மனப்பான்மையே கொண்டிருந் தனர்.

அன்று அவர்களின் மனங்களில் நிறைந்திருந்த பரந்த சிந்தனையாலும் நாட்டின் அனைத்து மக்களினதும் ஒற்றுமை யினாலும் உண்மையான சுதந்திரத்தை இலங்கை மக்களுக்கு அனுபவிக்க முடிந்தது. அன்று அவர்கள் உயிர்த் தியாகங்களையும் பல்வேறு தியாகங்களையும் மேற்கொண்டு பெற்றுத்தந்த சுதந் திரத்தையே இன்று நாம் கொண்டாடி அனுபவிக்கின்றோம்.

சுதந்திரத்தின் அபிமானத்தை, சொல்லின் உண்மையான அர்த்தத்தை நாம் அனுபவிக்க வேண்டுமெனின் நாட்டில் வாழும் அனைவரும் குறுகிய நோக்கங்களை கைவிட்டு ஒற்றுமையுடன் கைகோர்த்து தோழமையுடன் அர்ப்பணிப்புக்களை செய்து நாட்டின் இறைமையை பாதுகாத்து அபிவிருத்திக்காக செயற்பட வேண்டும். என்றாலும் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றைப் பற்றிக் கூறுக் கொண்டிருக்கும் தாம் எமது தாய் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 60 ஆண்டுகள் கழிகின்றன இந்தத் தருணத்திலும் அபிவிருத்தி யடையாது ஏனைய நாடுகளில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட் டுள்ளமைக்குக் காரணம் நாட்டில் பயங்கரவா தத்தை பரவவிட்டு தமது குறுகிய நோக்கத்தையடைய முயச்சிக்கும் சிறு பிரிவினராலாகும்.

அதே போன்று அன்று எமது நாட்டுக்கு தேசிய வீரர்கள் பெற்றுத்தந்த சுதந்திரத்தை இந் நாட்டிற்குள் பரவியிருக்கும் பயங்கரவாதம் காரணமாக இரண்டு தசாப்த காலங்களாக சுதந்திரமாக அனுபவிக்க முடியாதுள்ளது.

**பொது மக்களின் ஒத்துழைப்புத் தேவை**

பயங்கரவாதத்தை ஒழித்து இந்நாட்டிற்கு சமாதானத்தை மலரச்செய்யும் பட்சத்தில் தென் பகுதியிலுள்ள உங்கள் உறவு களை சந்திக்கவும் உங்கள் உற்பத்திக்கு தென்பகுதியிலே கப்பம் வரியின்றி சந்தைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்நாட்டிற்கு சமாதானத்தை ஏற்படுத்த யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகள் மட்டுமன்றி சாதாரண பொது மக்களினதும் முழு ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. எமது தாய் நாட்டின் சுதந்திரத்தை கொண்டாடும் இந்த மேலான நாளில் நாட்டின் எதிர்கால சந்ததிக்காக சௌபாக்கியமுடைய இலங்கையை கட்டியெழுப்ப இன்று நாம் எமது கடமைகளையும் பொறுப்புக் களையும் எவ்வித குறைபாடுமின்றி எமது தாய்நாட்டிற்கு வழங்கி திறன் மிக்க எதிர்கால சந்ததிகளை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்புப் படையினர் சார்பில் உங்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று எம்முன் இருக்கும் இந்த சவால்களை வெற்றி கொள்வதற்காக பொது மக்களான உங்களது முழு ஒத்துழைப்பையும் பாதுகாப்புப் படையினர் எதிர்பார்ப்பதுடன் அடுத்துவரும் சுதந்திரதின விழாவை நாம் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி கூடிக் கொண்டாடக் கூடிய சுதந்திர தினமாக வேண்டுமென்று பிராத்திக்கின்றோம். என்றுள்ளது.

## கொழும்பு, தம்புள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள்விடுதலைப்புலிகளின் தாக்குதல்பாணிகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு முன்னதாக பொதுமக்கள் மத்தியில் பீதியான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மற்றொரு பயணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸிலிருந்து வெளியே வீசி மனிதப் பேரவலம் ஒன்றைத் தவிர்த்தார்.

கொழும்பு, மருதானை, காமினி பஸ்தரிப்பிடத்திற்கு அருகில் அமைந்துள்ள முஸ்லிம் கலாசார நிலையத்திற்கு முன்னால் நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் வீசப்பட்ட இந்தக் குண்டுப்பொதி பின்னர் இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினால் செயலிழக்கவைக்கப்பட்டது.

இது குறித்துக் கூறப்படுவதாவது:-

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு வழமையாக லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தைத் தாண்டி, கொம்பனி வீதி ஊடாகச் செல்லும் 138 ஆம் இலக்க பஸ், நேற்றைய பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை தாண்டி மருதானை ஊடாகப் பயணித்தது.

அச்சமயமே அந்த பஸ்ஸில் குண்டுப் பொதி ஒன்று கிடந்ததை அவதானித்த பஸ்ஸின் நடத்துநர் அந்தப் பொதியை எடுத்து பஸ்ஸை விட்டு வெளியே வீசினார் என்றும் அதனையடுத்து பொலிஸாருக்கு அது குறித்துத் தகவல் கொடுத்து விட்டுச் சென்றார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு விரைந்து வந்த இராணுவத்தினர்,பொலிஸார் மற்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் ஆகியோர் அந்தப் பொதியை சோதனையிட்டனர். அது குண்டு எனக் கண்டறியப்பட்டது. அதனை அவர்கள் செயலிழக்க வைத்தனர் என்றும் கூறப்பட்டது.

சம்பவத்தையடுத்து அந்தப்பகுதியால் சென்ற அனைத்து வாகனங்களும் பொலிஸாராலும், இராணுவத்தினராலும் சல்லடை போடப்பட்டன. அப்பகுதியூடான போக்குவரத்துகளும் சிலமணிநேரம் தடைப்பட்டிருந்தன. அங்கு சற்றுநேரம் பதற்றம் நிலவியது என்றும் கூறப்பட்டது. (சி)

## கோட்டை ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதப்பட்டது.

இந்தக் குண்டுவெடிப்பை அடுத்து கோட்டை ரயில் நிலையம் ஊடான சகல ரயில் போக்குவரத்துகளும் இடைநிறுத்தப்பட்டன.

எனினும், நேற்று மாலைக்குப் பின்னர் ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பின என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பலரும் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர். இதனால் தேசிய வைத்தியசாலை விபத்துப் பிரிவு நிரம்பி வழிந்தது. படுகாயமுற்றவர்களில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் 34 பேர் பெண்கள், 16 பேர் ஆண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைக்குத் திரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுதந்திரதின பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான விமான சேவைகளும் இன்றுவரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கிலிருந்தும் பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு 60 வருடங்கள் என்பது ஒரு சிறிய கால இடைவெளியாகும். இருந்தபோதிலும் இந்த 60 ஆவது ஆண்டு சுதந்திர வைபவமானது நாம் சுமார் 500 ஆண்டுகள் காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரத்தைப் பெற்று, தேசங்கள் எனும் சமூகத்தில் சுதந்திர மக்களாக எம்மை அடையாளப்படுத்திக் கொண்ட காலத்தை அது குறித்து நிற்பது அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை இக்காலப்பிரிவில் அதன் பல அடைவுகள் குறித்துப் பெருமிதம் கொள்ளத்தக்கதாக இருக்கிறது. அவற்றில் அநேகமானவை எமது பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் உலகுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன.

ஆசியாவிலேயே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின்நீண்ட மரபைக்கொண்டுதனித்து வமானவர்களாக நாம் திகழ்கின்றோம். உலகளாவிய சுகாதாரம், கல்வி, பால்சார் சமத்துவம், சமூக இயக்குகை என்பவற்றை மேம்படுத்துவதற்கான முதல் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒன்றாக நாம் விதிவிலக்கான சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகளை எட்ட முடியுமாக இருந்திருக்கிறது.

குறைந்த, நடுத்தர வருமான மட்டத்திலுள்ள நாடொன்றின் சாதாரணமாக எதிர்பார்க்கப்படுகின்றவற்றையும் கடந்து சென்று, இன்று நாம் மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளின் பலவற்றை அடைந்து அல்லது கடந்து நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

**பயங்கரவாத அழிவுகளுக்கு மத்தியிலும் வளர்ச்சி**

அண்மைய ஆண்டுகளில் எமது பிராந்தியத்தின் பாரிய வளர்ச்சி இயந்திரங்களுக்கு மீண்டும் ஒரு முறை முன் சென்று, எமது மக்களின் தலா வருமானம் வரவேற்கத்தக்க வகையில் உயர்ந்ததை நாம் கண்டோம். குறிப்பாக 25 வருட காலக் கொடூரப் பயங்கரவாதத்தின் அழிவுகளுக்கு மத்தியிலேயே நாம் சமூக அபிவிருத்தியில் இந்த அடைவுகளை எட்டக்கூடியதாக இருந்திருக்கின்றது.

60 ஆவது சுதந்திர ஆண்டை நாம் பூர்த்தி செய்யும் இச்சந்தர்ப்பத்தில் எம்முன் இரு பிரதான சவால்கள் காணப்படுகின்றன.

ஒன்று - பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிப்பது. மற்றையது - வறுமையை ஒழிப்பது.

முதலாவது விடயத்தைப் பொறுத்த வரையில் கிழக்கு மாகாணமானது தற்போது பயங்கரவாதத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கிறது என்பது திருப்தி அடையக்கூடியதாக இருக்கின்றது. அதை வடக்கிலிருந்தும் ஒழித்துக் கட்டுவதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருப்பதோடு வெற்றிக்கான சிறந்த எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் முன்னுதாரணமிக்க செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவிக்க நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சமவாய்ப்புமிக்க பொருளாதார அபிவிருத்தி வேண்டும்**

நாட்டில் சுதந்திரம் தொட்டு அபிவிருத்தித் திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்ற பல பகுதிகளையும் பயங்கரவாதத்திற்கும் அதற்கெதிரான போராட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் முன்னேற்றத்தின் பலாபலன்களைப் பெற்றுக்கொடுப்பதை கவனத்திற்கொண்டு மிகவும் சம வாய்ப்புமிக்க பொருளாதார அபிவிருத்தியொன்றை வறுமை ஒழிப்பு வேண்டிநிற்கின்றது.

பயங்கரவாதத்திலிருந்து விடுதலை பெற்று புதிய உதயத்தைக் காண்கின்ற கிழக்கு மாகாணம் உள்ளிட்ட - புறக்கணிக்கப்பட்ட கிராமப்புறங்களில் இதுவரை அடையப்பெறாத அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு எனது அரசு ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

இந்தச் சவால்களுக்கு முகம்கொடுக்கும் அதேவேளை மொழி, மத, கலாசார ரீதியாக செழிப்பான பன்மைத்துவம் கொண்ட எமது இலங்கைத் தேசத்தின் சகல மக்களும் அனுபவிக்கின்ற உரிமைகளில் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

**புதிய இலங்கையை நோக்கி ஐக்கியமாக நகர்வோம்**

அநேகமான கொந்தளிப்புகள், தடைகளினூடே கடந்த 60 ஆண்டுகளில் கணிசமான வெற்றியையும் பல்வேறு முன்னேற்றத்தையும் அடைந்துள்ள நாம், கடந்த காலங்களில் எம்மைப் பின்னடையச் செய்த வேறுபாடுகள், சந்தேகங்கள் என்பவற்றிலிருந்து தூரவிலகி, தேசமொன்றாக உண்மையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காக எதிர்காலத்தில் எமக்கு முன்னாலுள்ள பாரிய பணிக்காக உற்சாகத்துடன் சவால்மிக்க வெற்றியுடன் கூடிய புதிய உலகை நோக்கி முன்னேற வேண்டியிருக்கின்றது.

புதியதோர் இலங்கையை நோக்கி ஐக்கியத்துடன் நகர்வதற்கான எமது திடசங்கற்பத்தை நாம் மீள்உறுதி செய்துகொள்வோம். - என்று உள்ளது.

## ரயில் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

சம்பவம் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தகவல் தெரிவிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

தற்கொலைக் குண்டுதாரியின் இலக்கு ரயில் நிலையம் அல்ல. அவரது இலக்கு வேறாகவே இருந்திருக்கவேண்டும்.

ரயில் நிலையத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, ரயிலில் இறங்கிய அவர் திடீரென குண்டை வெடிக்கவைத்துள்ளார் எனக் கருதவேண்டியுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

**25 பேரின் நிலை கவலைக்கிடம்**

இதேவேளை நேற்றிரவு வரை சம்பவத்தில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒன்பது பேரில் நால்வர் பாடசாலை மாணவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நிலையில் 103 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 25 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## தெஹிவளை மிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இனம் தெரியாத நபர் ஒருவர் ஏதோ ஒரு பொருளை வீசியமையைத் தொடர்ந்து திடீர் மின்னலும் பாரிய சத்தமும் எழுந்ததாக அங்கு அச்சமயம் நின்றிருந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த ஏழு பேரும் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலிஸார் தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையையும் தற்காலிகமாக மூடினர்.

கைக்குண்டு வெடிப்பிற்கான காரணம் தெரியவில்லையெனவும், இது குறித்து விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)


பெப்ரவரி 9 சனி | கிளை நிறுவனம் DMI | காலை 8 மணி

154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம்.

A/L Day, 2008, 2009, 2010 (கலை வர்த்தகப் பிரிவுகள்)

பாடங்களைத் தாங்கிவருவோர்

| | |
|---|---|
| சந்திரசேகர் | கனகேஸ்வரன் |
| ஜோதீஸ்வரன் | தேவராஜா |
| விஜயகுமார் | தவசேகர் |
| மோகன் | சுதர்சன் |
| பாபு | K.R. சூரி |
| பத்மன் | S.S. சிறி |
| இளங்கோ | B.S. பசில் |

D. Sam


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு நகுலேஸ்வரி

தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு நகுலேஸ்வரி நேற்று (03.02.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி சரவணமுத்து - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வெற்றிவேற்பிள்ளை, தருமநாயகி, கணேஸ்வரி, சபாநாயகம் மற்றும் சிவனேஸ்வரி, இராமலிங்கபிள்ளை, பிறேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2008) திங்கள்கிழமை பிற்பகல் ▪ மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.இராமலிங்கபிள்ளை
(சகோதரன்)

மடத்துப்பிள்ளையார் கோவிலடி,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

### மரியாம்பிள்ளை மனுவேல்பிள்ளை

நாவாந்துறையைச் சேர்ந்த மரியாம்பிள்ளை மனுவேல் பிள்ளை 03-02-2008 அன்று காலமானார், அன்னார்காலஞ் சென்றவர்களான மரியாம்பிள்ளை,திரேசம்மா ஆகியோரின்அன்பு மகனும், ஆசீர்வாதம், பிரகாசி ஆகியோரின் பாசமிகு மருமகனும், றெஜினாவின் ஆருயிர் கணவரும் மரியம்மா, காலஞ் சென்றடானிசியஸ் ஆகியோரின் அன்புச் கோதரனும், பீற்றர் லேனாட்(அமெரிக்கா), திரேஸ் அஞ்சலினா (நோர்வே), அன்ரன் றெஜிராஜ் (கனடா) சகாயப் பிரகாஸ், அருட்சகோதரி கௌசலா, அருள்மேரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், எட்வேட், கல்யாணி, குமுதா, கார்த்தியாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரெனா, கார்த்திகா, நிகேதனா, பெவின், டிவைனா ஆகியோரின் அருமை பாட்டனும், காலஞ்சென்ற சின்னராசா, காலஞ்சென்ற அக்னஸ், ஜேசுதாசன் (கனடா), காணிக்கைமலர்(கனடா), ஆசீர்தாசன்(கனடா) ஆகியேரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஆன்னாரின் பூதவுடல் நாளை (05-02-2008) செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணியளவில் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
சகாயப்பிரகாஸ் (சுகிர்)
மகன்


கணக்கீடு

2008 DAY பங்குடைமை
ஆரம்பம்: 05.02.2008 4.pm
2010 A/L
ஆரம்பம்: 09.02.2008 8.am
★ 10 [illegible]
ஆசிரியர்: N. சங்கர் B.Com., H.N.D.A
[illegible]

ENGLISH SPOKEN WITH GRAMMAR BY. BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்: 06.02.2008
இடம்: கொக்குவில் (ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
நேரம் காலை 7.50
புதன், வெள்ளி வகுப்புக்கள்.

வணிகக் கல்வி
PAPER CLASS
ஆரம்பம்
5.2.2008 செவ் 4pm
By. பாசேர
யூனிவேர்சல்

SUNSHINE EXAM
★ A/L 2008 பரீட்சைக்குத்தோற்றும் கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு உரியது.
★ Phy., Che., Maths, Bio எனும் ஒழுங்கில் வாராந்தம் புதன்கிழமை 11 மணிக்கு நடைபெறும்.
★ நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள், விரிவுரையாளர்களால் நடத்தப்படும்.
★ வினாத்தாள் திருத்தித் தரப்படும்.
★ கலந்துரையாடல் நடைபெறும்.
★ விடைக் குறிப்பு வழங்கப்படும்.
★ எவரும் கலந்து கொள்ளலாம்.
ஆரம்பம்: 06.02.2008 புதன்
பிரிவு I-11.30 a.m
பிரிவு II-2.30 p.m
தொடர்புகளுக்கு
NEW SCIENCE CENTRE யாழ் நகர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org